REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு
தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர ஆனி கஎ 1-7-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 1

JAFFNA COLLEGE LIBR. 2 JUL 1951 VADDUKODDAI, CEYLON.

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# பராமுகம் ஏன்?

## காரச் சோடா முக்கியமானது
## மந்திரிசபையினர் எதிர்ப்பது நீதியல்ல

நமது அரசியல் நிருபர்

இலங்கையிற் காரச்சோடா தேவைக்கு ஏற்றபடி கிடைப்பதில்லை. அழுக்குகளைக் கழுவுவதற்கு இன்றியமையாத இச்சோடா இதுவரையும் வெளிநாடுகளிலிருந்தே இலங்கைக்கு அனுப்பப்பட்டுவந்தது. இப்போது யுத்தத்துக்குவேண்டிய உபகரணங்கள் செய்வதற்கு இது அதிகமாக உபயோகிக்கவேண்டியிருத்தலால் அங்கிருந்து அதன் ஏற்றுமதி தடைப்படலாயிற்று.

சவுக்காரஞ் செய்வதற்கும் உடைகளின் அழுக்கைப் போக்குதற்கும் வழியறியாது இலங்கையிலுள்ள வியாபாரிகளும் மற்றையோரும் கஷ்டப்படுகின்றனர். காலந்தாழ்க்காது ஒரு சோடாத்தொழிற்சாலையை விரைந்து அமைக்கும்படி கைத்தொழில் ஆராய்ச்சிப்பகுதி மந்திரி பிடிவாதமாக நின்றும் மந்திரிசபையினர் இணங்கவில்லையெனத் தெரிகின்றது. இதற்குக் காரணம் யாதோ தெரியவில்லை. இலங்கையிற் சென்ற சில மாதங்களாகச் சோடாக் கிடைக்கப்பெறாது மக்கள் அடையுங் கஷ்டத்தை அரசினர் இன்னும் உணராதது பெரிய விந்தையாகின்றது. கடலுப்பு அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் இந்தச் சோடா மிக இலகுவாக அதிக செலவின்றி உண்டாக்கப்படலாமாம். ஆனையிறவிலுள்ள உப்பளத்துக்கு அருகாமையில் இந்தத் தொழிற்சாலையை அமைக்கும்படி கைத்தொழிற்பகுதி மந்திரி மிக்க ஊக்கத்துடன் கோரினர். மேலும் இந்தச் சோடாத் தயாரிக்கப்படுதற்குவேண்டிய இயந்திரங்களும் அதிக செலவின்றிப் பெறக்கூடுமாம். விஷயமிவ்வாறுகப் பிரதமரும் மற்றைய மந்திரிசபையங்கத்தினரும் இவ் விஷயத்தில் ஏன் வெறுப்பும் பராமுகமுங் காட்டுகின்றனரோ தெரியவில்லை. வருடாவீதம் இலங்கையில் 1500 தொன் சோடா செலவாகின்றதென அறியக்கிடக்கின்றது. ஒரு தொழிற்சாலை அமைப்பின் நாட்டுக்குவேண்டிய சோடாவினை அதிக செலவின்றிப்பெறுவதுடன், மிகுதியாகவுள்ளதை வெளி நாடுகளுக்கும் அனுப்பக்கூடியதாக இருக்கும். அரசினர் இவ் விஷயமாக மேற்கொள்ளும் முறை மிக ஆட்சேபத்துக்கு இடமானதென்றே கூறவேண்டும். இந்த அவசிய விஷயத்தைப் பின்போடுவதும் எதிர்ப்பதும் நீதியாகாது.

### ஆயுள்வேதம்

ஆயுள்வேத வைத்தியத்தை அரசினர் ஏற்றமுறையில் விருத்திசெய்யத்திட்டங்கள் வகுக்கவில்லையென்று இப்பத்திரிகையில் பன்முறை எடுத்துக்காட்டியதுண்டு. இப்போது வைத்தியப் பகுதி மந்திரியார் இத்துறையிற் சிறிது அக்கறை காட்ட முன்வந்ததைப் பாராட்டாதிருக்க வியலாது. ஆயுள்வேதத்தைச் சிறப்புடன் விருத்திசெய்து அதைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் அரசினர் ஒரு புதிய பகுதியைச் சிருட்டிக்கவிருக்கின்றனர். மேனாட்டு வைத்தியப் பகுதியைப் பரிபாலிப்பதற்கு ஒரு தலைவர் இருப்பதுபோல இதற்கும் ஒரு தலைவர் நியமிக்கப்படுவார். இச்செய்தி கீழ்நாட்டு வைத்தியமுறையில் நம்பிக்கையும்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)



மரகதத் தீவாகிய இலங்கையில் மணங் கமழும், மலர் வகைகள் பலவுள. ஆனால் அவற்றைப் பற்றிய நூல்கள் ஏதும் வெளியாகவில்லை. சென்ற வாரம் பிரதம தேசாதிபதி சோல்பெரி அவர்கள் மலர்க் காட்சி ஒன்றினைத் திறந்து வைத்துப் பேசும்போது இது போன்றகாட்சி முன்னர் ஒருபோதும் இங்குநடைபெறவில்லையெனத்தாம் நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

# கல்விப்பேச்சு

## எதிர்காலம் பற்றிய கவலைகள்
## பரிசளிப்புவிழாக்களில் அதிபர்கள்விளக்கம்

நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம், 29-6-51

யாழ்ப்பாணத்தில் இப்போது சில வாரங்களாகக் கல்வி சம்பந்தமான பேச்சுகளாகவேயிருக்கின்றன. கல்லூரிப் பரிசளிப்பு விழாக்களிலும் ஆசிரியர்களின் கூட்டங்களிலும் கல்வியின் எதிர்காலத்தைப்பற்றியும் புதிய கல்வி அறிக்கையிலுள்ள முக்கிய அம்சங்களைப்பற்றியுமே ஆசிரியர்களும் பெற்றோர்களும் பேசி வருகின்றனர்.

கல்வி சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் மிகுந்த அக்கறைகாட்டி வருவது நூதனமன்று. ஏனெனில் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு இலங்கையிலுள்ள தமிழர்கள் போதியளவு பங்கு உதவிவருகின்றனர். எனவே, நாட்டின் எதிர்காலத்தைப் பாதித்து நிற்கும் ஒரு விஷயம்பற்றி யாழ்ப்பாணத்திலுள்ளவர் சிரத்தைஎடுப்பதில் எவ்வித நூதனமுமில்லை.

### தொழிலின் மகத்துவம்

சமீபத்திற் பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிய கல்வி மந்திரி சே. கனகரத்தினம் அவர்கள், பெண்களின் எதிர்காலத்தைப்பற்றியும் சமூகச் சீரமைப்பில் அவர்கள் போதிய பங்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கமாகப் பேசியிருந்தார்கள். புதியகல்வித்திட்டமானது நாட்டுமக்களுக்குத்தொழிலின் மகத்துவத்தையெடுத்துக்காட்டி நாட்டின் செல்வ வளத்துக்கு வழிகாட்டியிருப்பதாகவும்

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

# கோரியாப் போர்

## சமாதானத்துக்கு ருஷியா யோசனை

கோரியாப்போர் ஆரம்பமாகி இப்போது ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. சென்ற வருடம் ஜூன் மாதம் 25-ந் திகதி அதிகாலையில் மூண்ட யுத்தம் கோரியாவைச் சுடுகாடாக்கிவிட்டு, இன்று உலகத்தைப் பயமுறுத்திக்கொண்டு நிற்கின்றது.

வடகோரியாவிலுள்ள கொம்யூனிஸ்டுகள் அன்று 38-வது அட்சரேகையைத் தாண்டித் தென்கோரியாவுக்குட் புகுந்தனர். யுத்தம் ஆரம்பமாகிய சில தினங்களுள் வடகோரியர் தென்கோரியாவின் தலைநகரமான சியோலைக்கைப்பற்றிக் கொண்டனர்.

கோரியரின் திடகாத்திரமும் அஞ்சா நெஞ்சமும் எதிரிகளுக்கு மிகுந்த பீதியை உண்டாக்கி வந்தன. வடகோரியர் வெற்றிக்கு மேல் வெற்றி ஈட்டி வந்தனர்.

ஆனால் மூன்றுமாதத்துக்குள் வடகோரியப் படைகள் பின் வாங்கி ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தளபதி மாக் ஆர்தரின் யுத்தவீரர்கள் மஞ்சூரியா எல்லையில் அணிவகுத்து எதிரிகளைத் துரத்தி அடித்தனர். 150,000 வடகோரியர்கள் யுத்தக் கைதிகளாயினர்.

கோரியா யுத்தம் உலகயுத்தமாகிவிடக்கூடுமென நேருஜி உணர்ந்தார். எனவே, என்ன விதத்திலும் கோரியாவிற் சமாதானம் ஏற்படவேண்டுமென்ற அவசியத்தை ஐக்கிய நாடுகளுக்கு வற்புறுத்தி வந்தார். அத்துடன் மாக் ஆர்தரின் இராணுவப் போக்குகளையும் வன்மையாகக் கண்டிக்கதுவந்தார்.

சென்றவருடக் கிறிஸ்மஸ் தினத்தை அமெரிக்க யுத்தவீரர்கள் தங்கள் சொந்த வீடுகளிலேயே கொண்டாடுவார்கள் என எதிர்பார்த்திருந்த மாக் ஆர்தருக்குப் பெரிய ஏமாற்றம் உண்டாயிற்று. அமைதி நிலவியிருந்த யுத்தமுனையில் உக்கிரமான போர் ஏற்பட்டது. சீனத்துருப்புக்கள் பல்லாயிரக் கணக்கிற் புகுந்து ஐக்கிய நாடுகளின் யுத்தவீரர்களைத் திண்டாடச் செய்தன.

வீரம் பேசிய மாக் ஆர்தர் மிரள மிரள விழித்தார்! இவ்வாண்டு ஜனவரி மாதம் 4-ந் திகதி வடகோரியர் சியோல் நகரை மீண்டுங் கைப்பற்றினர்.


மாக் ஆர்தரின் திட்டங்கள் யாவும் கோரியாவிற் பொடிப்பொடியாவதைக் கண்டு ஜனாதிபதி ட்ரூமன் தமது தளபதியை மேமாதம் முதல் வாரத்திலேயே ஊர் திரும்பும்படி அவசர அவசரமாகக் கட்டளை பிறப்பித்தார். பதவியைப் பறிகொடுத்த மாக் ஆர்தர் வெறுங்கையுடன் அமெரிக்கா திரும்ப வேண்டியதாயிற்று.

கோரியாவிற் சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்தும் எதுவும் உருப்படுவதாயில்லை. இவ்வாண்டு பெப்பிரவரி மாதம் முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் சங்கம் சீனத்துக் கொம்யூனிஸ்டுகளே கோரியாவை ஆக்கிரமித்தனர் எனப் பட்டங் கட்டினர். மே மாதத்திலிருந்து வடகோரியாவுக்கு யுத்தத்துக்கான உபகரணங்களும், வேறு முக்கிய பொருள்களும் சென்றவண்ணமாக இருக்கின்றன. நிலைமை இன்னும் மாற்றமடையவில்லை.

இந்நிலையில் சோவியத்துருஷியா இன்று ஒருயோசனைகூறியுள்ளது. 38-வது அட்சரேகையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவது பற்றி விவாதிப்பதற்காகக் கோரியப் போரில் ஈடுபட்டுள்ள கட்சிகள் ஒன்று கூடிப் பேசவேண்டுமென்பதே அத்திட்டமாகும்.

முதலாவதாக இருகட்சிகளிடையே பேச்சு வார்த்தை ஆரம்பிக்க வேண்டும். 38-வது அட்சரேகையிலிருந்து இருதரப்பினரின் படைகளும் அகன்று கொள்வதற்கான ஏற்பாட்டையும் யுத்தம் நிறு

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க



கோரியாவில் வெற்றி காண முடியாத மாக் ஆர்தர் தமது மனைவியுடனும் மகனுடனும் உவாஷிங்டன் சென்றடைந்தார். [illegible] இவர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

✻

### கொண்டோடி

- யாழ்ப்பாணத்திற் பனை மரங்கள் அதிகமாம்.
- பனைமரச் சொந்தக்காரர்கள் கள் இறக்குபவர்களை ஒன்று கூட்டவேண்டுமாம்.
- கள் வேண்டாம்; கருப்ப நீர் இறக்கும்படி அவர்களுக்குக் கூறவேண்டுமாம்.
- கருப்பநீரைச் சேர்த்துப் பனங்கட்டி உற்பத்தி செய்யவேண்டுமாம்.
- பனங்கட்டி மிகுந்தாற் கள் குடிக்கும் பழக்கம் ஒழியுமாம்.
- கள் ஒழிந்தாற் சண்டைகள் மூளாதாம்.
- இதனாற் கொலைக் குற்றங்களுங் குறைந்துவிடுமாம்.
- பனங்கட்டி உபயோகித்தால் நீரிழிவு மறைந்துவிடுமாம்.
- முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பனை வெல்லம் இலங்கையில் இறக்குமதியாகின்றதாம்.
- யாழ்ப்பாணத்திற் பனை வெல்லத்தை உற்பத்தி செய்தால் அவ்வளவு பணத்தையும் இலங்கையில் வைத்துக்கொள்ளலாம்.
- தமிழ் மொழியும் வெல்லம் போல் இனிமையானதாம்.
- வாழைச்சேனையிற் பேசிய சாலி அவர்கள் தமிழ்முழக்கம் செய்தாராம்.
- தமிழர்கள் ஊமையராய், உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாய் வாழ்ந்தனராம்.
- இலங்கை வீரமாநகராம்.
- வீரமா நகரிலே தமிழர்கள் கோழைகளாக வாழக்கூடாதாம்.
- தமிழன் வாழப் பிறந்தவனும்.
- வாழ்க்கைக்கு விவாகம் அவசியமாம்.
- களுத்துறை மக்கள் இதை நன்கு உணர்ந்தவர்களாம்.
- களுத்துறையிற் கச்சேரியிருக்கின்றதாம்.
- சென்றவருடம் களுத்துறைக் கச்சேரியில் 1500 விவாகங்கள் பதிவு செய்யப்பட்டனவாம்.
- யாழ்ப்பாணக் கச்சேரியில் விவாகப்பதிவு நடைபெறுவது அருமையாம்.
- கச்சேரியிற் பதிவு செய்தால் செலவு அதிகமாம்.
- செலவைக் குறைப்பதற்காக வீட்டிற் பதிவுசெய்து கொள்வார்களாம்.
- தென்னிலங்கையிலுள்ளவர்கள் பெரிய செலவாளிகளாம்.
- யாழ்ப்பாணத்தவர்கள் கூட்டுறவாளர்களாம்.
- கூட்டுறவு மந்திரி கம்பளையில் இந்த உண்மையைக் கூறினாராம்.
- யாழ்ப்பாணத்தவர்கள் உற்சாகத்துடன் உழைக்கின்றனராம்.
- இலங்கையின் வேறுசிலபாகங்களில் உள்ளவர்கள் பேசிப் பேசிக் காலங் கழிக்கின்றனராம்.
- பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடையாம்.
- யாழ்ப்பாணத்தில் இது சகஜமாம்.

## இளைஞரும் தமிழும்

### வாழைச்சேனையில் விழா

ஈழத்து இளைஞர் தமிழ் மன்றத்தின் சார்பில் இளைஞர் தமிழ்விழா திரு. கோ. கோணேசபிள்ளை ஆசிரியர் அவர்களின் தலைமையிற் சமீபத்தில் வாழைச்சேனையில் நடைபெற்றது.

தலைவர் பேசும்போது: தாழ்வுற்றுக்கிடக்கும் தமிழகத்தின் எழுச்சிக்கு இளைஞர்கள் விழித்தெழ வேண்டும் என்றும் ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் விழித்தெழுந்து விழுமிய நோக்குடன் மொழித்தொண்டாற்றவேண்டும். என்றும் கேட்டுக்கொண்டார்.

பேராசிரியர் அருட்டிரு விபுலாநந்த அடிகளினதும், அமரகவி பாரதியினதும் திருவுருவப் படங்கள் திரு. இளையதம்பி ஆசிரியர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன. பின், திரு. ஏ. தெட்சணாமூர்த்தி அவர்கள் (ஸி. ஸி. எஸ்) 'தமிழர் பெருமை' என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர். சுதந்திரன் உதவி ஆசிரியர் திரு. எஸ். இராசதுரை அவர்கள் 'நாம் யார்? எங்கே செல்கிறோம்?' என்னும் பொருள்பற்றியும், திரு. எம். சாலி அவர்கள் 'இளைஞர் இதய ஒலி' என்பதுபற்றியும், திரு. எஸ். எஸ். பாக்கியராசா 'கிழக்கிலங்கைத் தமிழ்' என்பது பற்றியும், திரு. எம். அகமது லெவ்வை 'இளைஞர் வாழ்வில் புரட்சி' என்பதுபற்றியும், திரு. ஐ. எல். எம். யூசுப் 'புத்துலகம் படைப்போம்' என்பதுபற்றியும் விரிவுரைகள் ஆற்றினர்.

## நிலாவெளி சனசமூக நிலையம்

நிலாவெளிச் சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற 23-6-51 சனிக்கிழமை மாலை திருகோணமலைப் பிரதிநிதி திரு. எஸ். சிவபாலன் அவர்களின் தலைமையிற் கூடியது. வருடாந்த அறிக்கைகள் வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கிராமாபிவிருத்தி மேற்பார்வை உத்தியோகஸ்தர் திரு. வி. கே. சிவகுருநாதர் அவர்களால் சனசமூக நிலையங்களின் நன்மைகளைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. தலைவர் திரு. எஸ். சிவபாலன் அவர்கள் அங்கத்தவர்களுக்கிடையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியம் எனவும் தற்போதைய ஜனநாயக ஆட்சியில் இப்படிப்பட்ட சனசமூக நிலையம், கிராமமுன்னேற்றச் சங்கம் என்பவைகளின் தீர்மானங்களைக் கொண்டே அரசாங்கம் கிராமங்களின் உண்மையான தேவைகளை அறிந்து அவைகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறது எனவும் தமது பேச்சிற் குறிப்பிட்டார். பின்னர் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. என். சண்முகம் பிள்ளை, காரியதரிசி திரு. ஏ. செல்லையா, தனாதிகாரி திரு. எஸ். ஏ. தங்கராசா.


சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4337]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ அப்பர் பாடியுள்ள திருப்பதிகங்களிலும், பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலும் எளிமை இருப்பதைக் காண்கின்றோம்.

# இக்கால இலக்கியம்

## தமிழ் உலகில் இரு சக்திகள்

பேராசிரியர்
அ. சீனிவாசராகவன்

இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து ஆரம்பித்த இலக்கியத்தை இக்கால இலக்கியமாகக் கொள்ளலாம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஏற்பட்ட இலக்கியத்தை இக்கால இலக்கியமாகக் கொண்டாற்றான் பழைய இலக்கியத்துக்கும் இக்கால இலக்கியத்துக்குமுள்ள வேற்றுமைகளை அறியமுடியும். கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளை மட்டும் இக்கால இலக்கியத்தின் காலமாகக் கொண்டால் ஏற்றத் தாழ்ச்சிகளை ஒப்பிட்டுப்பார்த்தல் சாத்தியமாகாது.

### ஆங்கிலக் கல்வி

இரு பெருஞ் சக்திகள் தமிழ்ச் சமுதாயத்தில் இடம் பெற்றன. ஒன்று மேற்றிசைக் கலைஞானம். மற்றது தேசிய இயக்கமாகும். ஆங்கிலக் கல்வியினால் நாட்டுக்குத் துரோகம் விளைந்துள்ளதாகவும் பல தீமைகள் சம்பவித்துள்ளதாகவுங் குறை கூறப்படுகின்றது. இக் குறைபாடுகளைக் கண்டிக்கவோ ஆதரிக்கவோ நான் முற்படவில்லை. ஆங்கிலக் கல்வியினால் நன்மைகள் பல ஏற்பட்டுள்ளன வென்பதை நாங்கள் மறுக்கவே முடியாது.

ஆங்கிலக் கல்வி அறிவியலை ஆதாரமாக வுடையது. எல்லோருக்கும் பயன்படக்கூடிய பொதுவான கல்வியைப் போதித்துப் பொது வாழ்க்கையில் உயர்வு தாழ்வுகளையும் சாதி மத பேதங்களையும் பாராட்ட வேண்டாமென வற்புறுத்தியது. சமுதாய சேவையே இறைவனுடைய சேவையென்று எடுத்து விளக்கிற்று. சாதி மத பேதம் பாராட்டக் கூடாதென்ற உண்மையும், சமுதாய சேவையே இறைவன் சேவை என்ற உண்மையும் தமிழர் பண்பாட்டிற்குப் புறம்பானவைகளன்று. இவ் வுண்மைகளை நாம் சிலகாலம் மறந்து போய்விட்டோம். மறைந்து கிடந்த இவ்விரண்டு பேருண்மைகளைத்தான் கிறிஸ்தவ பாதிரிமார்களும் ஆங்கிலேயர்களும் நமக்கு ஞாபகப் படுத்தினர்.

### தென்னாடுடைய சிவன்

சங்க இலக்கியங்களிலுந் தேவார திருவாசகங்களிலும் இவை பொதிந்து கிடக்கின்றன. முற்றுந் துறந்த ஞானிகளும் பழுத்த அனுபவம் பெற்ற மக்கள் சிலருமே இப் பேருண்மைகளை நடைமுறை வாழ்க்கையிற் பின்பற்றி வந்தனர். சாதாரண மக்களுக்கு இவை அப்பாற்பட்ட விஷயங்களாகவேயிருந்தன. கிறிஸ்தவப் பாதிரிமார்கள் நடைமுறை வாழ்க்கையில் இவற்றை அனுஷ்டித்துக் காட்டினர்.

> "தென்னாடுடைய
> சிவனேபோற்றி!
> எந்நாட்டவர்க்கும்
> இறைவாபோற்றி!"

என்றார் மணிவாசகப் பெருமான்.

தென்னாட்டின்கண் சிவனாக வணங்கப்படுபவன், ஏனைய பிறநாடுகளிலே இறைவனாக வணங்கப்படுகின்றானென் என்றார் மணிவாசகர்.

பிறநாடுகளிற் புறசமயத்தவர் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை மாணிக்கவாசக சுவாமிகள் நன்கு அறிந்திருந்தார். ஆகவேதான் பிறநாட்டினர்க்குச் சிவனே கடவுள் எனக் கூறாது எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்குகிறானென்று ஓதினார்.

### தேசீய இயக்கம்

இனி, தேசிய இயக்கத்துக்கும் இக்கால இலக்கியத்துக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிப்போம்.

தேசிய இயக்கத்தின் காரணமாக நமது நாட்டில் ஒற்றுமை வளர்ந்தது. நமது மொழி, கலை என்பவற்றைப் பேணி அவற்றிலே பெருமை கொள்ளச்செய்தது. ஜனநாயக உணர்ச்சி வளம் பெற்றது.

பாரதிக்குப் பின்னர் உள்ள இக்காலத்தைப் பாரதி சகாப்தம் எனக் குறிப்பிடுவது சாலவும் பொருத்தமானது.

"வேதியராயினு மொன்றே அன்றி வேறு குலத்தினராயினுமொன்றே" என்ற பாரதியார் பாடலிற் சாதிபேதத்தை ஒழிக்குங் குரல் கேட்கின்றது.

"ஞானத்திலே பர மோனத்திலே" என்ற பாடலிற் பண்டைப் பெருமை தொனிக்கின்றது.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்றதில் ஜனநாயக உணர்ச்சி ததும்புகின்றது. புத்தம் புதிய கலைச் செல்வங்களையுங் கொணர்ந்து இங்கு சேர்க்குமாறு பாரதியார் கூவியழைக்கின்றார்.

### இலக்கியத்தில் எளிமை

மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தில் இறைவனை நோக்கித் தத்துவத் தமிழிற் பாடினார்கள். இன்று இவ்வுலகத்தை நோக்கி இனிமைத் தமிழிற் பாடுகின்றார்கள்.

இலக்கியத்தில் எளிமை மிக அவசியமானது. இலக்கியம் சந்திரனைப்பற்றியும் விண்மீன்களைப் பற்றியதுமன்று. சமூகத்துக்குந் தனி மனிதனுக்குமுள்ள தொடர்புகளையும், அத் தனி மனிதனின் உணர்ச்சிகளையும் வெளியிடுவதே இலக்கியம்.

அப்பர் பாடியுள்ள திருப்பதிகங்களிலும், பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலும் எளிமை இருப்பதைக் காண்கின்றோம்.

இலக்கியம் தன்மயமாக வேண்டும். தன்மயமாகும் போது அதில் எளிமை பிறப்பதைக் காண்கின்றோம்.

ஆறுமுக நாவலரின் வசன நடையும், பாரதியின் வசன நடையும் எல்லோரும் உவக்கத்தக்கன.



## வாழ வரம் வேண்டுவேன்

— துள்ளுமணி —

ஆக்கமுடன் அரசியலை
உருவாக்கி வழிகாட்ட
அயராமல் நிதமுழைக்கும்
அரசியல்வாணன்
ஊக்கமுடன் முன்னெழுந்த
உழுவலன்பன் தியாகவள்ளல்
உலகறிந்த காந்திஜியின்
உண்மைப் பக்தன்
நீக்கமற யாவருள்ளும்
நிறைந்துநின்று நீதியுடன்
நிலமாள வந்தமுதல்
குடியரசு வள்ளல்
ஏக்கமுறும் எளியவர்க்காய்
ஏங்குகின்ற ராஜன்பாபு
எந்நாளும் வாழவரம்
வேண்டுவனே!

ஐரோப்பா யாத்திரை

★ இலங்கையிலுள்ள மேயர்களும் பட்டினசங்கத் தலைவர்களும் கிராமச் சங்கத் தலைவர்களும் இப்படி நடந்துகொள்வார்களா?

# கண் கவர் பவனி

## படை வீரர்கள் வரிசை

சென்றவாரத் தொடர்ச்சி

வழக்கறிஞர்
அ. அருளம்பலம்


அர்ச் போல்ஸ் ஆலயத்திற் பல காட்சிகளையும் நாம் பார்க்கும் போது மேயருடைய பவனி தூரத்தில் வருகின்றது என்று யாரோ அறிவித்தார்கள். வெளியே சென்று பார்த்தோம். ஒரே சனப் பெருக்கம். ஆனால் பவனி செல்வதற்காக நடுவிலே போதிய இடம் விட்டு வீதியின் இரு மருங்கிலும் வரிசை வரிசையாக மக்கள் குழுமியிருந்தார்கள். பக்கத்திலுள்ள மாட மாளிகைகளில் ஈ மொய்த்தது போல் எள்ளளவும் இடைவிடாது சனங்கள் நெருங்கி இருந்தார்கள். இக் காட்சியை விரிப்பதற்கு ஒரு கம்பனே வேண்டும்.

> "மானினம் வருவ போன்று
> மயிலினந் திரிவ போன்றும்
> மீனினம் மிளிர்வ போன்று
> மின்னின மிடைவ போன்றும்
> தேனினஞ் சிலம்பி யார்ப்பச்
> சிலம்பினம் புலம்ப வெங்கும்
> பூணேந் துந்தன் மாதர்
> பொம்மெனப் புகுந்து மொய்த்தார்"

### அணிவகுப்பு

முதலிற் குதிரை வீரர்கள் வரிசையாக வந்தார்கள். இவர்களுக்குப்பின்னால் மேளவாத்திய கோஷ்டி, இதன் பின் கப்பற் படை வீரர்கள் பவனி, அடுத்தாற் போல் விமானப் படை வீரர்களின் வரிசை, இதன் பின் ஸ்கொற்லாந்து தேசத்துக் காலாட்படையின் பகுதி, அடுத்தாற் போல் அயர்லாந்து தேசத்துத் துப்பாக்கி வீரர்களின் வரிசை, இவர்களுக்கிடையிடையே அந்தந்தப் பட்டாளத்திற் கேற்ற மேளவாத்தியம் இத்தனையும் அணிவகுத்தாற் போற் சென்றன. இவற்றின் பின்னால் ஆடம்பரமான ஒரு பவனி. இவ்வருஷம் யுத்தம் மூண்டால் எவ்விதம் மக்கள் தம்மைப் பாது காக்கவேண்டுமென்று அறிவுறுத்தும் வகையால் ஒரு விபரமான காட்சி பல மோட்டார் இரதங்களிலும் வைத்துக் காண்பிக்கப் பட்டது. ஆகாயத் தாக்குதல் நடந்தால் எப்படி ஒளித்துக் கொள்வது, தீப்பற்றினால் எவ்விதம் அதை அவிப்பது, வீடுகள் விழுந்தால் அவற்றில் அகப்பட்டவர்களை எப்படித் தப்புவிப்பது, காயமுற்றவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு போகமுன் எவ்விதம் உதவி செய்து சிகிச்சை கொடுப்பது என்பனபோன்ற சகல விஷயங்களும் காண்பிக்கப் பட்டன. இதன்பின் வரிசை வரிசையாக அரசாங்க உத்தியோகஸ்தரும் நீதிபதிகளும் சென்றார்கள். இவர்களுக்குப் பின் முந்திய ஆண்டுகளில் மேயர் பதவியிலிருந்தவர்கள் சென்றனர். கடைசியாகப் புதிய லோட் மேயரும் அவருக்கு

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


இலக்கிய மஞ்சரி
4-ம், 5-ம், 6-ம் புத்தகங்கள்
பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம், ஐந்தாம், ஆறாம் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| விலை : | 4-ம் புத்தகம் | ... | 50 சதம் |
| | 5-ம் ,, | ... | 60 ,, |
| | 6-ம் ,, | ... | 75 ,, |

சுன்னுகம்: திருமகள் புத்தகசாலை

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேரன் செங்குட்டுவன் வீரக் கண்ணகிக்கு விழா நடத்தியபோது இலங்கை வேந்தன் கயவாகுவும் வந்திருந்ததாகச் சிலம்பு கூறுகிறது.

# வீரத் தமிழர் காப்பியம்

## காவிரி கண்ட கலை விழா

"ஹரிக்கன் விளக்கு அல்லது 'பெட்ரோமாக்ஸ்' விளக்கைப் பார்த்த மாணவர் கை உயர்த்தலாம்" என்று அமெரிக்காவில் உயர்நிலைப்பள்ளிக் கூட வகுப்பு ஒன்றில் ஓர் ஆசிரியர் கேட்டாராம். ஆனால் மாணவர் ஒருவரேனும் கையை உயர்த்தவில்லையாம். இதற்குக் காரணம், மின்சார விளக்குத் தவிர வேறு வாயிலாக அவர்கள் வெளிச்சத்தை அறியாததே. இதிலிருந்து, இக்காலத்திற் சில நாடுகளில் மின்சார வளர்ச்சி எவ்வளவு மிகுந்திருக்கின்றது என்பது பெறப்படும்.

### மக்கள் வியப்பு

மின்சார வசதியே இல்லாத ஒரு சிற்றூரில் — அதுவும் ஏதோ 1800 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு கதையின் விவரங்களை அறிய — ஆயிரக் கணக்கான தமிழ்மக்கள் ஜூன் மாதம் 15, 16, 17 திகதிகளிற் குழுமியிருந்தனர். விமான நிலையமோ, புகைபிரத நிலையமோ இல்லாத இவ்வூருக்குப் பஸ் போக்குவரத்தும் கிடையாது. தென்னிந்தியாவின் களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்திலிருந்து 11 கட்டை தொலைவுவரையே பஸ் செல்லுகிறது. அப்பாலுள்ள 5 கட்டை தொலைவுக்குச் சாலை கிடையாது. பாலைவனம் போன்ற மணலில் வண்டியிலேயே செல்லவேண்டும். இந்த விழாவுக்கென மூன்று நாட்களிலும், தனி ஊர்திகள் — பஸ் வசதி — ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கல்லணைக்கட்டிலிருந்து காவிரிப் பூம்பட்டினத்திற்கு வரும் பாதையும் இதுவே ஆகும். இதன் இருமருங்குகளிலும் உள்ள மரங்கள் 400 அல்லது 500 ஆண்டுகளாக இருக்கின்றன. இதனால், இம்மரங்களின் கிளைகள் பஸ் போக்குவரவைத் தடைசெய்யும் நிலையிலுள்ளன. கடவுச்சீட்டு, உடல் நிலை பற்றிய உறுதிமொழிகள் ஆகியவை தேவைப்படாவிடினும், சுங்கச் சோதனை நடைபெறாவிடினும், மேற்கூறிய காரணங்களால், **சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லுவதைவிட, பூம்புகாருக்குச் செல்லுவது கடினமான பயணமாகவே இருந்தது.**

இத்தனைத் துன்பங்களையும் பொருட்படுத்தாது, பொது

×××××●×××××

சோம. லெ.

– இலக்குமணச் செட்டியார் –

×××××●×××××

மக்கள் விழாவிற் பங்குபற்றியது தமிழின் மலர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகும். நமது மொழி புத்துயிர் பெற்றிருப்பதன் பயனாக, தனித்தனி நூல்களைப்பற்றிய கட்டுரைகள் மட்டுமே அடங்கிய மாத இதழ்கள் இப்போது வெளிவருகின்றன. அந்நூல்கள் சம்பந்தமான வகுப்புக்களும் நடைபெறுகின்றன. இப்போது மாநாடுகளும் நிகழ்கின்றன. சிலப்பதிகாரத்தின் பெயரால் கூட்டப்பட்ட இம் மாபெரும் விழாவில் தமிழ்ப் புலவர்கள் பலர் அந்நூலை ஏடு ஏடாக, வரி வரியாக, எழுத்து எழுத்தாக ஆராய்ந்தனர். இச் சொற்பொழிவுகளைக் கேட்கச் செந்தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் இங்கே திரண்டனர். அணித்தேயுள்ள ஊர்களில் வாழும் சாதாரண மக்கள், **"இப்போது தை அமாவாசையும் இல்லை. ஆடி அமாவாசையும் இல்லை. மிகுதியான சனங்கள் காவிரிக் கரைக்குச் செல்லுகிறார்களே!"** என்று கூறி வியந்தனர்.

### இனிமைத் தமிழ்

சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. கண்ணகி, மாதவி, கோவலன் ஆகியோர் வரலாற்றை இது கூறுகின்றது. இளங்கோ யாத்த இக்காப்பியம் சிலம்பின் அடிப்படையில் இயற்றப்பெற்றிருக்கிறது. சிலம்பு என்னும் அணி அக்கால மகளிர் குறித்த காலத்தில் அணிந்து பின்னர் பேழையுள் வைக்கும் ஒரு நகை. இந்த நூல் அக்காலத்திலே தமிழரின் நாகரிகம், வாழ்க்கை நிலை, அரசியல் முறை ஆகியவற்றையும் தெரிவிக்கிறது. காவிரிப்பூம்பட்டினம் பல மைல் தூரத்துக்குப் பரவியிருந்ததையும் பெரிய துறைமுகமாக விளங்கியதையும் இந்நூல் வாயிலாக அறிகிறோம். **நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாடு** என்று தமிழகத்தின் எல்லையையும் இந்நூல் குறிக்கிறது. தமிழ்மொழியின் இனிமைக்கு எடுத்துக் காட்டாக, இந்நூலிலுள்ள **மாசறு பொன்னே, வலம்புரி முத்தே** என்று தொடங்கிவரும் ஏழு வரிகளைக் குறிப்பிடலாம்.

சிலப்பதிகாரக் காப்பியத்துக்கும் விழாவுக்கும் **மூன்று** என்ற எண் மிகவும் சிறப்பானது ஆகும். ஏனெனின், சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம். அது மூவேந்தரைப் பற்றியது. அதன்கண் குறிக்கப்பெற்றுள்ள நிகழ்ச்சிகள் மூன்று நகரங்களில் நிகழ்ந்தவை. அந்த நூல் மூன்று காண்டங்களை உடையது; மூன்று உண்மைகளைப் புலப்படுத்துவது. ஏற்கனவே, சென்னையிலும் சேலத்திலும் சிலப்பதிகார மாநாடுகள் நடைபெற்றதால், பூம் பட்டினத்தில் நடைபெற்றது இவ்வரிசையில் மூன்றாவது மாநாடாகும். இப்பட்டினத்தின் சிறப்பைக்கூறும் நூல்களும் மூன்று — சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, மணிமேகலை. இவ்விழா மூன்று நாட்களுக்கு நடைபெற்றது. அந்த நாட்கள் தமிழாண்டின் மூன்றும் திங்களில் முதல் மூன்று நாட்கள் ஆகும். நிகழ்ச்சி நிரலிற் குறிப்பிட்டிருந்தவர்களில் விழாவுக்கு வராதவர்கள் மூவர் — **சா. கணேசன், சின்ன அண்ணாமலை, செட்டிநாட்டரசர்.** விழாவில் நிறைவேறிய தீர்மானங்கள் மூன்று. விழாவை ஒட்டிய விருந்துகளில் முக்கனிகளும் வழங்கப்பட்டன.

### இனிய விருந்து

சிலப்பதிகார விழாவை இப்போது நினைக்கும்போது அங்கே சிறப்பாகப் படைக்கப்பட்ட உணவுவகைகளே நினைவுக்கு வருகின்றன. இவ்வளவு சிறந்த விருந்தை இதுவரை கண்டிலம், கேட்டிலம் என்று யாவரும் ஒருமிக்கக் கூறினர். **சோழ நாடு சோறுடைத்து** என்ற சொற்றொடர் மிகைபடக்கூறப்பட்டதன்று என்பதை இவ்விழாவில் உணர்ந்தோம். வெளியூர் அன்பர்கட்குக் கட்டணமின்றியே உணவு தரப்பட்டது. அறிஞர்கட்குத் திரு இராமலிங்கம்பிள்ளை அவர்கள் இல்லத்திலும், ஏனையோர்க்கு நகரவிடுதியிலும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கட்டிடம் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் 30 ஆண்டுகளுக்குமுன் அரை லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இன்றைய காவிரிப் பூம்பட்டினத்தில், இதுவே பெரிய கட்டிடமாக விளங்குகிறது. விழாவின் இறுதி நாளில் எல்லோர்க்கும் இங்கே தான் உணவு வழங்கப்பட்டது. யாராவது ஓர் அமெரிக்க நிருபர் இம்மூன்று நாட்களில் இங்கே வந்திருந்தால், அவர் அனுப்பும் செய்தியின் பயனாக, அமெரிக்கா இந்தியாவுக்குத் தரும் 19 கோடி டாலர் (90 கோடி ரூபாய்) மதிப்புள்ள உணவுப்பொருள்கள் வருவது தடைப்பட்டிருக்கும். அங்கே அளிக்கப்பட்ட உணவின் அளவு மிகுதி என்பது மட்டுமன்று, அவற்றின் வகைகளும் பலப்பல. அவை ஆக்கப்பட்டிருந்த தன்மையும் பாராட்டுக்கு உரியது. ஒவ்வொரு வகையும் சுவையாக இருந்தமையால், **தோள் கண்டார் தோளே கண்டார்** என்பதுபோல், கத்தரிக்காய்ப் பகோடாவை உட்கொண்ட 'கலைமகள்' கி.வா.ஜ. மற்ற வகைகளை மறந்துவிட்டார். வாலாசாபாத் ஐயா மோர்க் குழம்பையே உண்டார். ட்ரோசன் அண்ணாமலைச் செட்டியார் மைசூர் இரசத்தையே பருகினார். புலவர் ஜி. சுப்பிரமணியபிள்ளை மாம்பழங்களை உருட்டித் திரட்டி உண்ட காட்சி காணற்கரியது. டொக்டர் மு.வ. மட்டும் செட்டி நாட்டுக் காய்கறி இரசத்தையும் யாழ்ப்பாணத்து இடியப்பத்தையும் எனக்கு நினைவுபடுத்தினார். இந்தப் பேருண்டியைக் கண்ட மாத்திரத்திலேயே, கிராமணியாருக்குப் பசிபோய்விட்டது. பிறருக்கும் இவ்வாறே. இவ்வளவு சிறந்த நிலையில உணவு ஏற்பாடு செய்தவர் சம்பந்தம் பிள்ளை அவர்கள் ஆவர்.

### பண்பாட்டு உணவு

இலங்கை அன்பர்களுக்காக யான் எழுதும் இக்கட்டுரையில், சில செய்திகளைக் கூறுதல் நன்று. ஈழத்து உணவு காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்த செய்தியைப் பட்டினப் பாலையில் அறிகிறோம். சேரன் செங்குட்டுவன் வீரக் கண்ணகிக்கு விழா நடத்திய போது இலங்கை வேந்தன் கயவாகுவும் வந்திருந்ததாகச் சிலம்பு கூறுகிறது. இந்திய இலங்கைத் தமிழகங்களுக்குள் உள்ள பண்பாட்டு உறவைப்

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)




துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 168-86 TM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மமும் நியாயமும் எங்கே

## மஸ்கேலியாப் பிரதிநிதி கண்டனம்

## தமிழ் அரசுக்கட்சித் தலைவரின் காரமான பேச்சு




பிரதம தேசாதிபதியின் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்பற்றி விவாதம் நடைபெற்ற பொழுது, எதிர்க் கட்சியினர் கண்டனமாரி பொழிந்தனர்.

மஸ்கேலியாப் பிரதிநிதி ஜனாப் ஏ. அஸீஸ் பேசுகையில், 'பிரதமதேசாதிபதி நிகழ்த்திய பிரசங்கமானது இலங்கை இந்திய காங்கிரஸின் கன்னத்தில் அறைந்ததுபோலிருந்தது'

"எட்டுஇலட்சம் மக்களின் வாக்குரிமையைப் பறித்துள்ள இந்நாட்டில் தர்மத்துக்கும் நியாயத்துக்கும் இடமேது? இதுதான் ஜனநாயகமா? உள்நாட்டு விஷயத்திற்கூட இலங்கை உற்பத்திசெய்யும் றப்பரைத்தானே உபயோகிக்கத்தெரியாமல் அதை அந்நிய நாட்டுக்கு அனுப்பி அதில் திருப்தியடைந்துகொண்டிருக்கிறது" எனக் குறிப்பிட்டார். பின்பு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில், பிரதிநிதிகள் சபையில் இப்பொழுதுள்ள தமிழ்ப் பேசும் இருபது அங்கத்தவர்களில் ஏழு பேர்கள் அடுத்த பாராளுமன்றத்தில் இருக்கமாட்டார்கள். இலங்கை அடைந்த சுதந்திரத்தின் முதலாவது கைமேற்பலன் இதுதான். அநேக இந்தியர்கள் வாக்குரிமையிழந்தனர். அஞ்சும் அரசாங்கம் பலவீனர்களை ஒடுக்கப்பார்க்கின்றது. இன்று இந்தியர்களுக்கு ஏற்பட்டகதிதான் நாளை இலங்கைத் தமிழர்களுக்கும். இதனால்தான் சமஷ்டி அரசியல் வேண்டுமென நாங்கள் கேட்கின்றோம்" என்று தமது கட்சிக் கொள்கைக்குரிய காரணத்தையும் விளக்கினார். அன்னியநாட்டுக் கொள்கை பற்றியும் காரசாரமான விவாதம் நடைபெற்றது. இதன்பின்னர் பிரதமர் பதிலளிக்கையில் "இந்த நாட்டை வேறொரு வல்லரசிடம் ஒப்படைக்க விரும்பும் மக்கள்மீது நமக்கு நம்பிக்கையில்லை. நமது கடைசி மூச்சு இருக்கும்வரை நமது சுதந்திரத்தைப் பாதுகாப்போம். பிரிட்டனோடு நமக்குள்ள உறவு சிநேகபூர்வமான உறவேயன்றி அடிமைக்கும் எஜமானுக்கும் இடையிலுள்ள உறவன்று. நமது சுதந்திரத்தைப் பறிப்பதற்கு எந்தக்கட்சிக்கும் அது எவ்வகையான தந்திரத்தைக் கையாண்டாலும், நான் இடங்கொடுக்கமாட்டேன்" என்று கூறினார். இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையைத் தாம் விளங்கிக்கொள்ள முடியவில்லையென டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசினார்.

### குழந்தைகளின் சேமம்

குழந்தைகள் பாதுகாப்புச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இராணி மாளிகையில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. 21 வருட காலமாக இச் சங்கம் செய்துவந்த சேவையைப் பிரதம தேசாதிபதி பாராட்டிப் பேசினர். குழந்தைகளின் சேமங்களைக் கவனிப்பதற்கு இதைப் போன்ற 12 ஸ்தாபனங்களாவது குறைந்தபட்சமிருக்க வேண்டும். குழந்தைகளுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளைத் தடுத்து, அவர்களின் நலன்களைப் பேணுவதற்கு அநேக ஸ்தாபனங்கள் தேவையெனக் குறிப்பிட்டார். பொதுசனங்களும் அரசாங்கமும் இத்துறையில் ஒத்துழைக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

### பின்போடுக

இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்ளும் கடைசித் திகதி ஓகஸ்டு மாதம் 5-ந் திகதியாகும். இத் திகதிக்குள் பிரஜா உரிமை பெறுவது அசாத்தியமென்றும், இன்னும் சிறிது கூடியகாலம் தவணை தரவேண்டும் என்றும் கோரிப் பாரத சேவாமண்டலம் ஒரு மனுவை உள்நாட்டு மந்திரி ஸேர் ஒலிவர் குணதிலக்க அவர்களுக்குச் சமர்ப்பித்துள்ளது'

### தண்ணீர் விநியோக நிபுணர்

போக்குவரத்து மந்திரி காரியாலயத்தின் கீழ்த் தண்ணீர் விநியோக வேலை நிபுணராகக் கடமையாற்றிய திரு. ஜே. சி. சாண்டர்சன் தாம் இலங்கையைவிட்டுப் புறப்படுவதன் காரணத்தைக் கூறியுள்ளார். "எனக்கு தேவையான உத்தியோகத்தர்களும், தளவாடங்களும், ஆதரவும் கிடைக்காதெனத் திட்டமாக அறிந்தபின்னரே இலங்கையிலிருந்து புறப்பட எண்ணினேன்" என்று கூறி, சம்பவங்களை உதாரணமாக எடுத்துக் காட்டினர். தண்ணீர் விநியோக விஷயத்தின் முக்கியத்துவத்தை இலங்கை உணராதிருக்கும்வரை இவ் விஷயத்தில் இலங்கை ஏனைய நாடுகளிலும்பார்க்கப் பின்னணியிலதான் நிற்கவேண்டி யேற்படும் எனவும் குறிப்பிட்டார்.

### புதுமைப் பித்தன் தினம்

இங்குள்ள இலக்கிய அன்பர்கள் புதுமைப்பித்தன் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகின்றனர். நிதி திரட்டும் விஷயத்தில் இங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள் மிகுந்த ஊக்கங்காட்டி வருகின்றன.

"புதுமைப் பித்தனை அகாலத்திற் காலன் கவர்ந்தாலும், அவருடைய புதுமை இலக்கியத்தின் இன்பத்தை அனுபவிக்கும் பேறு பெற்ற தமிழர் அவரை நினைவுகூர்ந்து அவர் குடும்பத்தாரைப் பாதுகாக்கும் கடமையில் தவறமாட்டார்கள்" என தினசரி ஆசிரியர் எழுதியிருப்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

★ மட்டக்களப்பு மக்களுடைய உணர்ச்சியின் எதிரொலிதான் சென்ற ஞாயிறு இங்கு முற்றவெளியில் கூடியதாகும்.

# ஓலைக் கொட்டில்கள்

## அரசினர் கல்லூரியின் கேவல நிலை

**இந்து ஆண்டுகட்குமுன்** நிறுவப்பெற்ற மட்டக்களப்பு அரசினர் கல்லூரி வெகு வேகமாக வளர்ந்து வந்திருக்கிறது. ஆறும் வகுப்புக்குமேல் உள்ள மாணவரின் தொகை இந்தக் கல்லூரியிலுள்ளதுபோல் இம் மாகாணத்திலுள்ள வேறு எந்தக் கலலூரியிலும் இல்லையென்று சொல்லப்படுகிறது. விசேஷ ஆசிரியப் பதவிகள் ஏற்று பல பட்டதாரிகள் உழைத்து வருகிறார்கள். இருந்தும் வகுப்புகளெல்லாம் கிடுகுகள் வேய்ந்த தற்காலிகக் கொட்டில்களில் நடந்து வருகின்றன.

மட்டக்களப்பு 'றோயல்' கல்லூரி என்று புகழப்படும் இக் கல்லூரியின் நிலை இவ்வளவு கேவலமாக இருப்பதை ஐந்து ஆண்டுகளாகப் பொறுமையுடன் பார்த்துவந்த மட்டக்களப்பு மக்களுடைய உணர்ச்சியின் எதிரொலிதான் சென்ற ஞாயிறு இங்கு முற்றவெளியில் கூடிய கூட்டமாகும்.

நகர பிரமுகர்களிற் சிலர் அக் கூட்டத்திற் சொற்பொழிவு ஆற்றினார்கள். கட்டிடத்திற்கென்று 9 லட்சம் ரூபாய் அரசினரால் ஒதுக்கப்பட்டிருந்தும் இதுவரை நிரந்தரமான கட்டிடங்கள் தோன்றாமைக்குக் காரணம் விளங்கவில்லை. மாணவர்களின் முக்கியமான இக் குறையையும், இதனாலேற்பட்ட அதிருப்தியையும் உணர்ந்து அரசினர் ஆகவேண்டிய காரியங்களை உடனே செய்ய வேண்டும்.

மக்களின் கோரிக்கை விரைவில் ஈடேறுவதற்கு மட்டக்களப்புப் பிரதிநிதிகள் கவனமெடுத்து அரசினரைத் துரிதப்படுத்துவார்களென்று நம்புகிறோம்.

### வித்தியாதிபதி விஜயம்

வித்தியாதிபதி டொக்டர் ஹவுஸ் அவர்கள் சென்ற சனிக்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தார். வழக்கத்திற்கு மாறாக நான்கு நாட்கள் தங்கிக் கல்விக் கந்தோரிலிருந்தே மாகாண பாடசாலைகளின் நிலையை அலசி ஆராய்ந்து பார்த்ததாகக் கூறப்படுகிறது. பாடசாலைகளைத் தராதரப்படுத்தும் முகமாக வந்த வித்தியாதிபதி அவர்கள் பாடசாலைகளைப் பார்வையிடுவார் என்ற எண்ணத்தால் அவைகளெல்லாம் தமது தோற்றத்தைச் சிறப்பாக எடுத்துக்காட்டப் பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டன. புதிய வாங்குகள், மேசைகள் என்பன திடீரென்று தோன்றின. இருந்தும் என்ன? வித்தியாதிபதி அவர்களைப் பார்வையிடாமலே புறப்பட்டுவிட்டார்.

**கிழக்குத் தபால்**

**நமது நிருபர்**

### கலைவிருந்து

அவருடைய ஆராய்ச்சியிலேற்பட்ட களைப்பைப் போக்குவதற்காகவோ என்னவோ மட்டக்களப்பு ஆங்கில பாடசாலைகள் மாத்திரம் சென்ற திங்களிரவு அவருக்கு ஒரு கலைவிருந்தளித்தன. வித்தியா கந்தோரால் ஒழுங்காக்கப்பட்ட இவ் வைபவத்தில் பரத நாட்டியமும், வேறு நாட்டியங்களும் இடம்பெற்றன. கலைத்துறையில மட்டக்களப்பு எவ்வளவு வேகமாக முன்னேற்றமடைந்து வருகிறது என்பதை இவை நன்கு விளக்கின.

### தமிழ்க்கலை மன்றம்

மே மாதம் 23-ந் திகதியிலிருந்து **மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம்** புதிய ஆண்டினை ஆரம்பித்துள்ளது. சென்ற ஆண்டுபல தமிழறிஞர்கள் ஆராய்ச்சி விரிவுரைகள் ஆற்றினர். மன்றச் செயலாளர் திரு. வி. சி. கந்தையா அவர்கள் இது விஷயத்திற் சலியாது உழைத்தார். இவர் மேற்படிப்புக் காரணமாக இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேருவதால் தமது பதவியிலிருந்து விலகிக் கொண்டதாக அறிகிறோம். புதிய செயலாளர் பழைய செயலாளரைப் போலவே ஊக்கத்துடன் உழைப்பார் என்று நம்பலாம்.

### தேகவியோகம்

**ஸ்ரீமதி அ. திருஞானப்பூங்கோதை**

கோப்பாய்தெற்கு திரு. க. அம்பலவாணர் அவர்களின் பாரியாரும், ஏழாலை அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு இராசையா அவர்களின் பிரிய அன்னையாருமாகிய **திரு. ஞானப்பூங்கோதை** அவர்கள் தம்மைப் பீடித்த நோய் காரணமாகத் தமது 55-வது வயதில் சென்ற 23-6-51 சனிக்கிழமை அதிகாலையிற் காலமானார். இவ்வம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## வானிசை

**வசந்தன்**

### கொழும்பு வானொலி

**20-6-51**

திரு. எஸ். கே. இராமமூர்த்தி

நாகசுரம்-இவர் 'பாமாலைக் கிணையுண்டோ' என்ற பாடலை நன்றாக வாசித்தார். ஹிந்தோளம் சோபிக்கவில்லை. இவருடைய வாத்தியத்திற் குளுமை உண்டாயின் இரஞ்சகமாகவிருக்கும்.

திரு. கே. கே. அந்தோனி

இவருக்கு நல்ல ஞானமிருக்கிறது. தாளத்தில் மாத்திரம் அதிக கவனம் செலுத்தினல் மற்றைய குறைகளை நிவிர்த்திக்கமுடியாது போய் விடும். இராகம் பாடும்போது கற்பனைகளை ஒழுங்குபடுத்தி அனுபவித்துப் பாட வேண்டும். இவருடைய கச்சேரியில் முக்கியமாகத் தாள வேலைப்பாடுகளைக் கவனிக்க முடிந்தது. பாட்டுக்களின் உச்சரிப்புத் தெளிவாயில்லை.

தாளவாத்தியக் கச்சேரி—திரு. பரம் தில்லைராஜா இக்கச்சேரியை நடத்தினர். சங்கராபரணத்தில் அமைந்த ஒரு பல்லவியைப் பாடினர். இராகம் சுருக்கமாகவும், நன்றாகவும் இருந்தது. வாத்தியகாரர் தங்கள் கைவரிசைகளைக் காட்டினர்.

பல்லவிநிகழ்ச்சிகள் தயாரிப்பவர்கள் இவ்வித நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்யாதிருத்தல் நன்று. அப்படிப் பதிவுசெய்தால் இசைத்தட்டுச் சங்கீதம்போலாகிவிடும். பல்லவி பாடக்கூடிய ஏனைய வித்துவான்களையும், சிறந்த நாகசுவரக்காரர்களையும் சேர்த்துக்கொள்வது அவசியமாகும்.

**21-6-51**

திரு. கே. குமாரசாமி

வயலின்-இவரது 'தெலிசிராம' என்ற பூர்ணசந்திரிகாப் பாட்டு நன்றாக இருந்தது. சங்கராபரண ஆலாபனை இன்னும் நன்றாக அமைந்திருக்கலாம். 'தூக்கிய திருவடி கவர்ச்சியாக இருக்கவில்லை. சாதகக்குறைவு காணப்படுகின்றது. இவர் உயர்தரமாக வாசிக்கக் கூடியவர். மிருதங்கம் வாசித்தவர் நாதசுகத்தை உண்டுபண்ண முயற்சிக்கவேண்டும்.

**22-6-51**

திரு. எஸ். எம். மூத்ததம்பி

இவர் அரை மணித்தியாலம் மிக நன்றாகப் பாடினார். சாரீரம ரேடியோவுக்குப் பொருந்தியது; சுருதி சுத்தமாகப் பாடல்களைப் பாடினார். அவசியமில்லாததும பொருத்தமில்லாததுமான சங்கதிகளை எத்தனிக்காமல் அடக்கமாகப்பாடினார். 'நிஜமர்மமுலனு' நன்று. பைரவி ராகம் பழைய பாணியிலமைந்து 'பால கோபால' என்றபாடலுக்குப்பொருந்தியிருந்தது. 'தேடித்திரியாதே' பாடியபொழுது தாளத்தில் நிதானங் காட்டியிருக்க வேண்டும.

இவர் கற்பனாசுரங்கள் பாடாதிருந்தபோதும் கச்சேரி சோபித்தது. சங்கீதமே தொழிலாகக் கொள்ளாத சில பாடகர்கள் சுரங்க

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க

கொழும்பில் ஈழகேசரி கிடைக்குமிடம்

பேசிக் புக்ஸ்டோர்ஸ், 99 சதாமவீதி, கோட்டை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னாகம், கரவருஷ ஆனி கஎ
— காந்தி ஆண்டு 82 —
பேசுந் தந்தி இல. 895

# 22

இற்றைப் பிரசுரத்துடன் தமிழ் மக்களின் பத்திரிகையாம் ஈழகேசரியின் இருபத்திரண்டாவது வருடம் ஆரம்பமாகின்றது. இத்தனை வருடங்கள் ஒரு பத்திரிகையின் ஆயுளில் சாமானிய காலமல்ல. பல சங்கடங்களும் யுத்த நெருக்கடிகளும் ஏற்பட்ட காலத்தில் எமது பத்திரிகை எவ்வித தடை தாமதங்களு மின்றி நடைபெற்றுவந்தது பெரிய காரியமென்றே சொல்லவேண்டும். உயரிய நோக்குடன் நாட்டின் நன்மையை இலக்காகக் கொண்டு தொண்டாற்றும் இப்பத்திரிகை பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுவந்தது நூதனமன்று. எவ்விதமான பேதங்களும் துவேஷங்களு மின்றி யாவர்க்கு மொப்பத் தொண்டாற்றவேண்டும் என்ற பேராவலுடன் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. வகுப்புத் துவேஷத்தை ஆரம்பத்திலிருந்து முற்ருகக் கடிந்து எதிர்த்துப் போராடி வந்தது ஈழகேசரி ஒன்றேயென்ருலும் பிழையாகாது. இக்காரணத்தால் இப்பத்திரிகை ஓரளவுக்கு வகுப்புவாதத்தை மேற்கொண்டுவந்த தமிழ் மக்களது வெறுப்பினைப் பெற்றதுண்டு. ஆனல் இவர்கள் காலகதியில் தாம் மேற்கொண்டவழியிலுள்ள இழுக்கினையும் நாம் கைக்கொண்ட வழியின் பெருஞ் சிறப்பினையும் வெட்ட வெளியாக அங்கீகரிப்பாராயினர்.

சென்ற வருடம் எமது பத்திரிகையின் வைபவத்தில் ஞாபகத்துக்குரிய காலமென்றே கூறவேண்டும். சிறிய மூலதனத்துடன் எவர் உதவியுமின்றி இப் பத்திரிகையை ஆரம்பித்து இப்போதைய உன்னத நிலைக்குக்கொண்டு வந்த எமது பத்திராதிபர் திரு நா. பொன்னையா அவர்கள் நோய்வாய்ப்பட்டு இறைவன் திருவடி எய்தினர். இப்பத்திரிகை பல துறையிலும் விருத்தியடையச் செய்தற்குத் திட்டமிட்டு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துவருங் காலத்தில் இவர் மறைந்தமை ஈடுசெய்யமுடியாத நஷ்டமென்றே கூறவேண்டும். இவ்வளவு சடுதியாக இவர் நம்மைவிட்டு நீங்குவாரென எவரும் நம்பியதுகிடையாது. அடுத்த சில வருடங்களில் நடக்கவிருக்கும் இப் பத்திரிகையின் வெள்ளி விழாவையாவது இவர் கண்டுகளித்தாலோவென்று நம் மனம் கருதி வருந்தியதுண்டு.

இப்பத்திரிகை வழக்கப்படி சிறிதும் ஊக்கங்குறையாது நடாத்தப்படவேண்டுமாயின் எமது அபிமானிகளின் நல்லாதரவும் ஆசியும் தாராளமாக வேண்டும். எமது கொள்கைகளை நாம் மேன்மேலும் எடுத்துக் கூறவேண்டியதில்லை. பொதுவாக யாவரும் நன்கு அறிவர். தேசிய நோக்குடன் நாட்டின் நன்மைக்கு முதலிடமளித்துப் பணியாற்றும் இப்பத்திரிகை இன்னும் உயர்ந்த நிலையை அடைவது அவசியமன்றோ? தமிழ் மொழியும், தமிழ் மக்களும், அதியுன்னத நிலையை அடைய வேண்டியதே நமது வேணவா. அது கைகூடவேண்டின் தமிழ் மக்களாயுள்ளோர் ஒற்றுமை யடைந்து பணியாற்ற முன்வரவேண்டும். மேலும் அரசியலில் நமது நாடு முன்னேறவேண்டுமாயின் எல்லா வகுப்பினரும் ஒத்துழைக்கவேண்டும். பெரும்பான்மை வகுப்பினராகும் சிங்களர் மற்றைய வகுப்பினரின் உரிமைகளைக் குறைவின்றி வழங்கவேண்டும். இவ்விஷயங்களில் ஈழகேசரி நடுநின்று பணியாற்றுமென்று நாம் துணிந்துகூறுவோம்.

இதுவரையும் இப் பத்திரிகையை ஆதரித்து வந்தது போல் மேன்மேலும் நமது அபிமானிகள் நமக்குக் குறைவின்றி ஆதரவளிப்பாராக. உயரிய நோக்குடனும் கொள்கையுடனும் நாம் புரிந்துவரும் தொண்டு வளர்ச்சியடைவதை எவரும் விரும்பமாட்டார். உண்மையைக் கடைப்பிடித்துச் சுயநலத்தை நோக்காது விசால மனத்துடன் பணிசெய்வார்க்கு ஒரு போதும் ஆபத்துவரக் காரணமில்லை. எனவே தேச பக்தர்களும் தமிழபிமானிகளும், சமுதாயசீர்திருத்தக்காரர்களும் எமக்குப் பேராதரவு தந்து ஆசிகூறுவார்களென்ற நம்பிக்கையுடன் தமிழ்த்தாயை வாழ்த்துகின்ருேம்.

## கூட்டுறவு விற்பனை

கூட்டுறவுப் பண்டகசாலைகள் புதிதாக ஏற்பட்ட காலத்திற் பெரு நன்மைகள் நாட்டிற்கு ஏற்படப்போகின்றனவெனப் பலரும் நம்பியிருந்தனர். இப்போது இப் பண்டகசாலைகள் விரும்பியபிரகாரம் விருத்தியடைவதாகக் காணேம். கூட்டுறவு முறையில் நடத்தப்படும் இப் பண்டகசாலைகளைப் பொதுமக்கள் அதிக ஆர்வத்துடன் ஆதரிப்பதும் அருகி வந்துகொண்டிருக்கின்றது. பங்கீட்டு அரிசி யொன்றிற்காகக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை நாடுகின்றனரன்றி மற்றும்படி எட்டியும் பார்க்கின்ருரில்லை. விஷயமிவ்வாருக அதனை நடத்தும் அதிகாரிகளும் அதைச் சீராகநடத்துவதில அக்கறைகொள்வதில்லை. இப்போது இலங்கையில் நாலாயிரம் பண்டகசாலைகள் இருக்கின்றன. இவைகளில் 1900 பண்டகசாலைகள் தான் இலாபத்துடன் நடைபெறுகின்றன. இவைகள் மொத்தமாக அடைந்த இலாபம் பதினைந்து இலட்சம் ரூபா. இது போற்றப்பட வேண்டிய விஷயமாகும். ஆனல் 1600 பண்டகசாலைகள் இலாபமடைவதற்குப் பதிலாகப் பத்துலட்சம் ரூபா நட்டமடைந்துள்ளன. மிகுதியாகவுள்ள 500 பண்டகசாலைகள் நட்டமாவது இலாபமாவது அடைந்தில. பண்டகசாலைகளை நடத்த நியமிக்கப்படும் உத்தியோகத்தர் நேர்மையும் தகுதியும் ஒழுக்கமும் உடையவராக வேண்டும். அதன் பரிபாலனத்தின் பொறுப்பினை ஏற்ற நிர்வாக சபையினரும் மிக்க ஊக்கத்துடன் அதன் விருத்தியிற் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அரசினர் மேற்பார்வையும் இடைவிடாது ஏற்பட வேண்டும். அப்போதுதான் இப் பண்டகசாலைகள் ஊழலின்றி நட்டமடையாது தொழிற்பட வியலும்

# பாதை ஓரத்தில்

பாட்டைசாரி

இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சனசமூக சாஸ்திரப்பகுதியானது இலங்கையிலுள்ள நான்கு கிராமங்களைத் தெரிந்தெடுத்து உலக விவகாரங்களைப் பற்றிய பொது அறிவுப் பரீட்சை ஒன்றைச் சமீபத்தில் நடாத்தியது.

யாழ்ப்பாணம், கண்டி, ஊவா, கீழ்ப்பிரதேசம் ஆதியாம் பகுதிகளிலுள்ள கிராமங்களே இந்தப் பரீட்சைக்கெனத் தெரிவுசெய்யப்பட்டன.

உலக விவகாரங்களைப்பற்றிக் கிராம மக்கள் அறிய வேண்டிய விஷயங்கள் பலவிருக்கின்றன. கிராமங்களுக்கு வானெலிகளை அதிகமாக அரசாங்கம் வழங்கி, அவற்றின் மூலம் உலக விவகாரங்களைப்பற்றி அறிவுறச் செய்வதே நன்று. இத்துறையில் அரசாங்கம் உழைத்துவருவது உண்மைதான். ஆனல் இந்த இலவச வானெலிகள் நல்ல முறையில் உபயோகமாகிவருகின்றனவோ என்பதே உலகவிவகாரத்திலும் பார்க்கப் பெரிய விவகாரமாக இருக்கின்றது.

## பத்திரிகைச் சுதந்திரம்

இந்திய அரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரத்திற் கைவைக்கத் துணிந்ததும் இந்தியப் பத்திரிகைகள் எல்லாம் 'அப்படியுமாச்சுதா?' என்று வீரகர்ச்சனை புரிந்துகொண்டு அரசாங்கத்தை எதிர்த்துநிற்கின்றன.

பல்வேறு கொள்கைகளையுமுடைய பல பத்திரிகைகள் இந்த விஷயத்தில் ஒற்றுமையாக நின்று போர்நடாத்துவதையறிந்து ஸ்ரீமான் பொதுஜனம் ஆச்சரியப்படுகின்ருர். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு இப் பத்திரிகைகள் சலியாது உழைத்தன. ஆகவே, தங்கள் அபிப்பிராய சுதந்திரம் பறிபோவதை அவை ஒருபோதும் விரும்பமாட்டா? இந்தியப் பிரதமர் நேரு சுதந்திரத்தில் மிகுந்த நம்பிக்கை பூண்டவர். அவர் இது விஷயத்தில் எதற்காக இப்படி நடக்கின்ருரோ தெரியவில்லை? ஏதோ ஓர் அடிப்படையான நோக்கம் இருந்தே ஆகவேண்டும்.

## புதுமைப் பித்தன்

புதுமைப் பித்தன் கற்பனைவளம் நிறைந்த ஓர் இலக்கிய மேதை. அவருடைய பேச்சில் நகைச் சுவை விரவியிருக்கும். ஒரு சமயம் அவருடைய வீட்டுக்குச்சென்ற நண்பர்களுக்குக் கிழிந்து போய்க்கிடந்த பாய்த்துண்டுகளைச் சேர்த்துப் போட்டுக்கொண்டே "என்ன பார்க்கின்றீர்கள்? நாங்கள் நவீன தமிழ்ப்பண்டிதர்கள். தாராளமாக அதில் உட்கார்ந்துகொள்ளுங்கள். அது சங்கப்பலகை" என்று சொல்லி எக்காளச் சிரிப்புச் சிரித்தாராம்.

* * *

எத்தனை தடவை பிழைகள் திருத்தினலும் பத்திரிகைகளில் எழுத்துப்பிழைகள் அவசரத்தில் ஏற்படுவதுண்டு. புதுமைப்பித்தன் அவர்கள் பிழைகளைத்திருத்திவிட்டு அதன் அடியிலே "கடவுள் துணை" என்று எழுதுவாராம். என்னல் முடிந்தமட்டுக்கும் பார்த்துவிட்டேன்; இனி, கடவுள் தான் மீதியைப் பார்த்துக்கொள்ள வேண்டும், என்பதை அந்தக் கடவுள் துணை சொல்லி வைத்தது.

## பொது அறிவுப் பயிற்சி

சென்றவாரம் சில கேள்விகள் குறிப்பிட்டிருந்தேன். இவ்வாரமும் சில வருமாறு:

4. இலங்கையில் வெளியாகும் தமிழ்த் தினவர்த்தமானிகள் எவை?

5. 'உதய தாரகை' எத்தனையாம் ஆண்டு தொடங்கியது.

6. பின் வருவனவற்றிலுள்ள சரி பிழைகளைக் குறித்துக் குறிப்பெழுதுக.

I அரணை மறவேல், அறனை மறவேல், அரணை மறவேல், அறணை மறவேல்.

II சர்க்கஸ், சேக்கஸ், சறுக்கிசு.

7. சரியானவற்றின் கீழ்க் கோடிடுக: யாழ்ப்பாணம், யாள்ப்பாணம், யாட்பாணம், இயாழ்ப்பாணம்.

# புதுமைப்பித்தன் சக்தி

புதுமைப்பித்தன் என்று சொன்னதும் புதுமையும், வேகமும், மேதாவிலாசமும் நம் முன்னே வருகின்றன வென்று அன்பர் சி. வைத்தியலிங்கம் அவர்கள் கொழும்பு வானெலியிற் பேசும்போது குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் புதுமைப்பித்தன் என்ற பெயர் தமிழ் இலக்கிய உலகிலே சக்திவாய்ந்ததென்பதை அறிவதற்குச் சென்றவாரம் ஒரு நல்ல சந்தர்ப்பங் கிடைத்தது. புதுமைப்பித்தன் குடும்பத்துக்கு நிதி திரட்டுவது சம்பந்தமாக அன்பர்களின் ஆதரவை வேண்டியிருந்தேன்.

வீரகேசரி ஆசிரியர் அன்பர் ஹரன் அவர்கள் புதுமைப் பித்தனின் மேதையை ஞாபகமூட்டி நிதி திரட்ட வேண்டியதின் அவசியத்தையும்தமது பத்திரிகையில் உருக்கமாகஎழுதியிருக்கின்ருர்.

தினகரன் ஆசிரியர் நாதன் அவர்கள் புதுமைப்பித்தன் குடும்ப சகாய நிதிக்குப் பணந்திரட்டும் விஷயத்திற் சகல ஒத்தாசைகளையும் செய்வதாகக் கொழும்பிலுள்ள இலக்கிய அன்பர் குருசாமி அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்ருர். அவர் தமது பத்திரிகை மூலம் ஆகவேண்டிய உதவிகளைச் செய்வார் என அறிகின்றேன்.

சுதந்திரன் ஆசிரியர் சிவநாயகம் அவர்கள் புதுமைப் பித்தனைப்பற்றிக் கட்டுரை பிரசுரித்திருப்பதுடன் புதுமைப்பித்தன் குடும்ப சகாய நிதிக்குத் தாராளமாகப் பணம் உதவ வேண்டுமெனவும் பத்திரிகை மூலம் வேண்டியுள்ளார்.

கொழும்பு வானெலி அன்பர்களின் ஆதரவும் கிடைத்திருக்கின்றது.

அன்பர்கள் சி. வைத்தியலிங்கம், ஏ. குருசாமி ஆதியோர் ஏனைய பெரியார்களின் ஒத்துழைப்புடன் ஆகவேண்டிய ஒழுங்குகளைக் கொழும்பிற் செய்து வருகின்றனர்.

ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களில் ஒருவரான சம்பந்தன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நிதிசேர்ப்பதற்கானபணிவிகளைத் தாம்செய்யத் தயார் எனக் கனிவுடன் எமக்குக் கடிதம் எழுதியிருப்பதுடன், தமது இனிய அன்பராகிய புதுமைப்பித்தனின் நினைவு தமது உள்ளத்தைக் கசியச் செய்திருப்பதாகவுங் குறிப்பிட்டிருக்கின்ருர்.

மட்டக்களப்பு அன்பர் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்களும் தம்மாலான உதவியைச் செய்வதாக எழுதியுள்ளார்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இம்மாதம் 2-ந் திகதி கோகலே மண்டபத்திற் புதுமைப்பித்தன் தினத்தைக் கொண்டாடுகின்றது. மந்திரி பக்தவத்சலம் அவர்கள் தலைமை தாங்குகின்ருர்கள். தினசரி ஆசிரியர் சொக்கலிங்கம், தினமணி ஆசிரியர் சிவராமன், அறிஞர் வ. ரா., தமிழ்ப்பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, ரா. ஸ்ரீ. தேசிகன் உட்பட வேறும் பல அறிஞர்கள் புதுமைப்பித்தன் வாழ்க்கையைப்பற்றியும் இலக்கியத்தைப்பற்றியும் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

வெளியூர் அன்பர்களும் இத்தினத்தைக்கொண்டாட வேண்டுமெனச் சென்னை எழுத்தாளர் சங்கங் கேட்டுக் கொள்ளுகின்றது.

புதுமைப்பித்தன் காசநோயாற் பீடிக்கப்பட்டு 1948-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதி காலமானுர். அப்போது வயது 42. "எழுதித்தான் பிழைப்பேன் என்று வைராக்கியம்கொண்டிருந்த புதுமைப்பித்தன் 'எழுத்துப் பொழுது போக்கு; பிழைப்பாகக் கொண்டால் ஆளைக் கொன்றுவிடும்' என்று கருதினுர்." என அன்பர் ரகுநாதன் எழுதுகிருர்.

இலக்கிய மேதைகள் வரிசையில் மிக முக்கிய இடம் பெற்றுள்ள கதாசிரியர் புதுமைப்பித்தன் தமிழை முறையாகப் பயின்றவர். ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டம் பெற்றுப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். பழந் தமிழ் இலக்கியங்களை நன்கு அனுபவித்த இவ்வாசிரியர் மிகச் சிறந்த புத்தம் புதிய சிறு கதைகளை எழுதினுர். வாழ்க்கையின் கசப்பான உண்மைகளையே இவர் தமது கதைகளுக்குப் பொருளாகக் கொண்டிருந்தார்.

புதுமைப்பித்தன் ஆசியாவிலுள்ள தலைசிறந்த கதாசிரியர்களுள் மிக முக்கியமானவர்.

இம்மேதையின் நினைவுநாளை முன்னிட்டு அவர் தம் குடும்பத்துக்கு நிதி திரட்டச் சென்னை எழுத்தாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கை அன்பர்களும் இத்துறையில் முயற்சி செய்கின்றனர். இது விஷயமாக வெளியூர் அன்பர்களை எம்முடன் தொடர்பு வைத்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இவற்றையெல்லாம் கவனிக்கும்போது புதுமைப் பித்தனின் சக்தியை நினைந்து பெருமையடையாதிருக்க முடியவில்லை.

—அரியரத்தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அபிப்பிராய சுதந்திரம் எங்களது பிறப்புரிமை, அரசியற் சட்ட மூலம் அது பூரணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய எங்களுக்கு ஓய்வு கிடையாது" என்ற சுலோகத்தைப் பத்திரிகைகள் தங்கள் தலையங்கத்துக்கு மேற் பிரசுரிக்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பத்திரிகைச் சுதந்திரம்

## அரசினரின் அனாவசியத் தலையீடு

**பத்திரிகைச் சுதந்திரத்தில் இந்தியா அரசினர் அனாவசியமாகத் தலையிடுவதை ஆட்சேபித்து இந்தியாவிலுள்ள சகல பத்திரிகைகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக்கூடாதென்று அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் மாநாடு முடிவுசெய்துள்ளது.**

**இந்த எதிர்ப்பைத் தெரிவிப்பதன் பொருட்டு நாட்டிலுள்ள சகல பத்திரிகைகளும் ஜூலை மாதம் 12-ந் திகதியன்று பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாவென மகாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.**

இந்தியாவிலுள்ளஎல்லாப் பத்திராசிரியர்களின் பெரியவோர் மகாநாடு டில்லிமா நகரில் சமீபத்தில் கூடியது. அரசினர் புதிதாக இயற்றிய சட்டத்தை இம் மகாநாட்டினர் மிகவுறுதியாகக் கண்டித்தனர். பத்திரிகைகள் இதுவரையும் அனுபவித்துவந்த சுதந்திரத்தை இப்புதிய சட்டம் முற்றாகக் கெடுத்துவிட்டதென்பதே இவர்கள் கோரிக்கை. பத்திரிகைகளுக்கு அடக்குமுறைச் சட்டம புதிதாக எழவேண்டியதற்குக் காரணமில்லையென்பதே இவர்களின் முடிவான தீர்மானம். எவ்வித விளக்கமும் விசாரணையுமின்றிப் பத்திரிகைகளை நிற்பாட்டுவதென்பது எப்படி நீதியாகுமாம். என்ன அவசரத்தை அல்லது தீமையைக் கண்டு அரசினர் இச்சட்டத்தை இயற்றிப் பத்திரிகைகள் இதுவரையும் அனுபவித்த சுதந்திரத்தைப் பறிமுதல் செய்தனரோ? இதுவரையும் பத்திரிகைகள் விஷயமாக அரசினர்க்குப் புத்திமதி கூறப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் ஆலோசனைச் சபை தொண்டாற்றி வந்தது. அரசினர் இப்படியாகப் பத்திரிகைகளின் உரிமைகளைப் பறிமுதல் செய்துவிட்டமையால் இனி இச்சபை அரசினர்க்குப் புத்தி கூறப்போவதில்லையாம். அரசினருடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. "அபிப்பிராயசுதந்திரம் எங்களது பிறப்புரிமை, அரசியற் சட்டமூலம் அது பூரணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய எங்களுக்கு ஓய்வுகிடையாது" என்ற சுலோகத்தைப் பத்திரிகைகள் தங்கள் தலையங்கத்துக்கு மேற் பிரசுரிக்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


### காங்கிரஸ் நிர்வாக சபை

இம்மாதம் 12-ம் திகதி பங்களூர் நகரில் கூடவிருக்கும் காங்கிரஸ் நிர்வாக சபை பல சந்தர்ப்பங்கட்கிடையே கூடுகின்றது. அடுத்துவரும் தேர்தலுக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்ய வேண்டியதாகின்றது. காங்கிரஸ் நிர்வாகத்திலும் அமைப்பிலும் தோன்றியுள்ள ஊழல்களை நீக்க நடவடிக்கைகள் கையாள வேண்டும். அன்றேல் அதன் ஆதிக்கம குன்றுவது நிச்சயம். காஷ்மீர் விஷயத்தை முடிவு செய்யவேண்டும். இது விஷயமாக அளவுகடந்தபுகார் பாகிஸ்தானுடன் ஏற்பட்டு வருகின்றது. காங்கிரஸ் மகாசபையை விட்டு விலகினவரைக் கொண்டுவரும் விஷயத்தில் காங்கிரஸ் சபை அதிகம் அக்கறை காட்டப் போவதில்லை. பிரதமர் நேரு பன் முறை நியாயங்களை எடுத்துக் காட்டியும், பரிதாபத்துடன் கேட்டும் இவர்கள் சிறிதும் செவிமடாது வெளியேறிவிட்டனர். புதியகட்சியை ஆரம்பித்துவிட்டனர். ஏதோ இவர்கள் தனியே நின்று தவண்டை அடிக்கவேண்டியதுதான். காங்கிரஸ்சபையார் தமது அலுவல்களைச் செய்து செல்வர். இந்தப் பெரிய ஸ்தாபனம் தூய்மையடைந்து உண்மையான தொண்டினைப் பழையபடி செய்யின் அதற்கு ஒருவித வீழ்ச்சியும் ஏற்படப் போவதில்லை.

காஷ்மீர் விஷயமாக அளவுகடந்த புகாரும் ஆத்திரமும் பாகிஸ்தானில் ஏற்பட்டுவருகின்றன. காஷ்மீரில் தேர்தல் நடந்து அரசியல் அமைப்புச் சபை நிறுவப்படுவதைப் பாகிஸ்தான் அரசினர் விரும்பவில்லை. ஐக்கிய நாடுகள் சங்கத்தினரும் இத் தேர்தலை நிற்பாட்டும்படி கேட்டனர். அதற்குக் காஷ்மீர் மக்களாவது இந்தியா அரசினராவது இணங்கவில்லை. பாகிஸ்தான் பத்திரிகைகள் பிரதமர் நேரு அவர்களை வாய்க்கு வந்தவாறு தாறு மாறாகத் தூஷிக்க ஆரம்பித்துவிட்டன. 'கொள்ளைத்தலைவன்' 'சதிமோசக்காரன்' என்றவிதமாக எழுதுகின்றன. ஐக்கியநாடுகள் சங்கம் நீதியைச்செய்ய இயலாவிடின் தாம் யுத்தஞ் செய்து இந்தியாவுக்கு நல்ல பாடம் கற்பிக்கத் தயாரெனப் பாகிஸ்தான் பத்திரிகைகள் கூறுகின்றன. அத்துடன் காஷ்மீர் விஷயங்களை நேரே சென்று சீர்தூக்கிப் பார்த்து முடிவுசெய்ய நியமிக்கப்பட்ட கிரஹம் என்பவர் வாஷிங்டன் நகரிலிருந்து இந்தியா புறப்பட்டுவிட்டனர். அவரை நேரு அவர்கள் உபசரித்துப் பேச்சுவார்த்தை நடத்த இசைந்துள்ளார். ஆனால் அவர் சொற்படி இந்தியா முற்றாகக் கேட்டு நிலலாது. காஷ்மீர் நாட்டின் கதியைக் காஷ்மீர் மக்களே முடிவு செய்ய வேண்டும்.

### யுத்தம் வேண்டுமா?

காஷ்மீர் தகராற்றினைத் தீர்க்கக்கூடியது யுத்தம் ஒன்றுதான் என்று பாகிஸ்தான் தலைவர்கள் இடிமுழக்கஞ்செய்கின்றார்கள். சென்ற நான்கு வருடங்களாக ஐக்கிய நாடுகள் சங்கம் இதனைத் தீர்க்குமென்று நம்பியிருந்ததாகவும் இப்போது அந்த நம்பிக்கை பொய்த்து விட்டதென்றும் இனித் தாம் நேரே யுத்தம் நடாத்தித்தான் விஷயத்தை முடிவுசெய்யவேண்டுமெனவும் இத்தலைவர்கள் கூறுகின்றனர். காஷ்மீர் மக்களைப் பலவந்தப் படுத்தித் தமக்குக்கீழ் வைத்துத் தாம் நினைத்ததைச் செய்



**ஆஸ்தான கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை அவர்களின் புதல்வி திருமதி இராஜலக்ஷ்மிக்கும், திரு. கே. ஆர். அனுமந்தன் எம். ஏ. (கோவை அரசினர் கல்லூரிச் சரித்திர விரிவுரையாளர்) அவர்களுக்கும் சென்ற 8651ல் நாமக்கல் கவிஞர் இல்லத்திலே திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஜனாதிபதி இராஜேந்திர பிரசாத், இராஜாஜி, சென்னைத்தேசாதிபதி, சென்னைப் பிரதமர் உட்பட ஏனைய மந்திரிமாரும் பத்திரிகை ஆசிரியர்களும் பிரமுகர்கள் பலரும் வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் அனுப்பியிருந்தார்கள்.**

## இந்தியா

விக்கின்றனரென பாகிஸ்தான் தலைவர்கள் கூக்குரலிடுகின்றனர். காஷ்மீர் மக்கள் இப்போது தமது தலைவர்களின் கீழ்ப் பூரண சுதந்திரம் அடைந்து தாமே பொதுத் தேர்தலை நடத்துகின்றனர். அவர்கள் தமது அரசியலைத் தாமே நிச்சயிக்கும் உரிமை உடையர். இந்திய அரசினர் எப்படி அவர்களைப் பலவந்தப்படுத்துகின்றனரோ தெரியவில்லை. இந்தப் பொய்ப்பிரசாரம் என்றும் நிலைக்கப் போவதில்லை. தாம் பாகிஸ்தானுடன் சேர்ந்திருக்க வேண்டுமென்று காஷ்மீர் முடிவு செய்தால் உடனே இந்திய சைனியங்கள் வெளியேறத் தயார்.

### நேர்பாளத்தில் நேரு

இந்தியாவின் பிரதமர் நேரு அவர்கள் நேர்பாள தேச அரசினர் கேள்விப்படி அங்கு சென்றுள்ளார். அங்கேயுள்ள காங்கிரஸ் கட்சிக்கிடையில் ஏற்பட்ட பிணக்கினை நீக்கிச் சமரசம் கொண்டுவருதற்காகவே அங்கு விஜயம் செய்துள்ளார். நேர்பாளத்தில் நேருஜிக்கு ஏற்பட்ட மரியாதையும் உபசாரமும் இம்மட்டன்று. இவரை விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக நாலு மைலகளுக்கு அப்பாலுள்ள தலைநகருக்கு அழைத்துச் சென்றனர், எல்லாக் கட்சியினரும் வகுப்பினரும் ஒருங்கு சேர்ந்து எவ்வித பேதமுமின்றி உபசாரமளித்தனர். பதினைந்து ஸ்தாபனங்கள் இவருக்கு உபசாரணைப்பத்திரம் பல பாஷைகளில் எழுதிவாசித்துக் கொடுத்தன. நேர்பாளத்தை அடிமைப் படுத்த இந்தியா என்றும் விரும்பியதில்லை.

## பாராமுகம் ஏன்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வமும் உடையார்க்கு மிக்க மனமகிழ்ச்சியை உண்டாக்கியுள்ளது. அரசினர் இவ் வைத்தியத்தைக்கற்பிப்பதற்கு மாத்திரம் பெருந் தொகைப் பணம் செலவு செய்வதுடன் எல்லாம் அமைந்துவிடாது. ஆயுள்வேத வைத்தியசாலைகளைக் கிராமங்கள்தோறும் ஏற்படுத்தித் தக்க பயிற்றப் பெற்ற வைத்தியர்களை அங்கு அமர்த்துவதும் மிகப் பிரதானம். இந்தியாவில் இவ் வைத்திய முறை அடைந்துள்ள முன்னேற்றத்தைக்கண்டு பிரமை அடையவேண்டியதாகின்றது. பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆயுள்வேதம் கற்பிக்கப்படுகின்றது. ஆயுள்வேத வைத்தியர்கள் அரசினர் சம்பளத்திற் பலவிடங்களில் நியமிக்கப்படுவது சாதாரண விஷயமாகும். பொதுமக்களுக்கு ஆயுள்வேத வைத்தியமே இன்று மிகவும் உபயோகப்படுவது. அதை மேன்மேலும் விருத்தியடையச் செய்வது அரசினரின் பெரும் அவசிய கடமையாகும். அதிக செலவின்றி நடத்தக்கூடிய வைத்தியம் பட்டினங்களிலும் கிராமங்களிலும் பெருகிப் பலனளிக்கும் காலத்தை விரைவில் எதிர்பார்க்கலாமா?

### திரு. ஆர். காசிலிங்கம்

சுன்னாகம் தபால் நிலையத்தில் உதவி அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆர். காசிலிங்கம் அவர்கள் ... முதலாந்தரத்திற்கு உயர்த்தப்பட்டு ... பதவிக்குமாற்றப்பட்டுள்ளார்.

## நீடிய ஆயுள்

நீண்ட காலத்துக்கு வாழ்வது இயலாத காரியமெனப் பலர் கருதுகின்றனர். பிரான்ஸ் தேசத்தில் இர்மா சாப்லன் என்று ஒரு வயோதிக மாது வசிக்கின்றார். அவர் 1842-ம் வருடம் பிறந்தவர். இப்போது வயது 109. சில அவசிய பிரமாணங்களைத் தவறாது நாளாந்த வாழ்க்கையில் மேற்கொண்டுவரின் எவரும் நீடிய ஆயுளுக்கு வாழ இயலும் என்பது இவர் கருத்து. நித்திரைக்குச் செல்லமுன் இரைப்பை வெறுமையாக இருக்கவேண்டுமாம். அப்போதுதான் ஆறுதலாக நித்திரை கொள்ளவியலும். இரவில் அதிகம் உணவு அருந்துவதும் தவிர்க்கப்படவேண்டும். தண்ணீர் உணவு முற்றாக நீக்கப்பட வேண்டியது. பஞ்சுமெத்தை, இறகுமெத்தை என்பன சயனத்துக்கு ஏற்றவையன்று. வைரமான பலகையில நித்திரை செய்வதே உத்தமம். காலையில் விடியமுன்னர் நித்திரை விட்டு எழவேண்டும். இரவில் நேரஞ் சென்று நித்திரைக்குச் செல்வது ஆரோக்கியத்துக்குப் பங்கத்தை யுண்டாக்கும். இவைகள் எல்லாவற்றிலும் பார்க்கப் பரிசுத்தமான இருதயமுடையதாயிருத்தல் மிகவும் பிரதானம். பொய், கபடம், பொறாமை, கோபம் முதலிய தீக்குணங்கள் ஆயுளைக் குறைக்கின்றன.

## வானிசை

5-ம் பக்கத்தொடர்ச்சி

களைப் பாடமாக்கி வானொலியில் ஒப்புவிக்கும்போது கேட்போரை வெகு சிரமப்படுத்துவதுடன் சங்கீதத்தையும் கெடுத்து விடுகின்றனர். திரு மூத்ததம்பி அவர்கள் அவ்விதமன்றித் தன்னடக்கத்துடன் பாடியது போற்றத்தக்கது. இவர் கற்பனாசுரங்களும் பாட முயற்சிக்க வேண்டும். தாரஸ்தாயியிற் பாட இவர் சிரமப்படுகின்றார். ஒரு பாடகர் தாரஸ்தாயியிற் பாடுவதற்கு வேண்டிய ஸ்வர வரிசைகளையோ அல்லது ஆகார சாதக முறைகளையோ அப்பியாசிக்க வேண்டியது அவசியம்.

திருமதி விஜயலக்ஷ்மிநமசிவாயம்

வயலின்–இவரது 'சரோஜநாப' என்ற ஸ்வாதித் திருநாள் சாகித்தியம் நன்றாயிருந்தது. ஸ்ரீரஞ்சனி இராகம் கற்பனைகளில்லாதிருந்தும் சுத்தமாக அமைந்திருந்தது. 'மாருபல்க' என்ற கீர்த்தனம் அழகுடன் விளங்கிற்று. 'நதஜன' என்ற சிம்மேந்திர மத்தியமப் பாட்டைக் கடைசியாக வாசித்தார். இராகம் சுருக்கமாயும் இரஞ்சகமாயும் இருந்தது. இப்பாட்டு வாசித்த பொழுது சுருதியைக் கொஞ்சம் கவனித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். எல்லாப் பாட்டுக்களையும் விளம்ப காலத்திலேயே எடுத்துக் கையாண்டாற் கச்சேரி சோபிக்காது. மத்திம கால உருப்படிகளும் சேருவது நல்லது.

திரு. எஸ். ராமையாபிள்ளை

நாகசுவரம்–இக் கச்சேரி அவ்வளவாகச் சோபிக்கவில்லை. தோடி, சரசாங்கி, ரீதிகௌளை போன்ற ஒழுங்கிற் கச்சேரி நடைபெறுவதாயின் அது எப்படிச் சோபிக்கும்? வானொலி நிலையத்துச் சங்கீதப் பகுதியினர் இந்த ஒழுங்கில் நிகழ்ச்சியை அமைத்தால், திரு. ராமையாவும் அதன்பிரகாரம் வாசித்தார் என்றால் அது அதிசயிக்கப்பட வேண்டியதே! இவர் ரீதிகௌளை அல்லது சரசாங்கியுடன் கச்சேரியை ஆரம்பித்திருக்கலாம்.

23-6-51

திரு. எஸ். சண்முகரத்தினம்

அகில இந்திய ரேடியோவில் துவாரம் வெங்கடசாமி நாயுடுவின் வயலின் வாத்திய இசையைக் கேட்டேன். கேதார கௌளையும், ரஞ்சனியும் பூரண அழகுடன் வானிற் கலந்துவந்தன. கச்சேரி முடிவடையவே 'ரேடியோ சிலோன்' ஞாபகத்துக்கு வந்தது.

திரு. சண்முகரத்தினம் 'ஐயா எனை யாண்டருளே' என்று பாடிக்கொண்டிருந்தார். அடுத்து இராகம், தானம் பல்லவியை கேதார கௌளையிற் பாடினார். இது அரிய விருந்தாகவிருந்தது. வெங்கடசாமி நாயுடு கட்டிய கேதார கௌளை அத்திவாரத்தில் சண்முகரத்தினம் ஓர் அலங்கார மாளிகை கட்டிவிட்டார். அபார கற்பனைகளுடனும் தெளிவான கமகங்களுடனும், மெல்லின வல்லினங்களுடனும் 'ஆஹா' என்று சொல்லும்படியாக இராகம் பாடியதுமன்றி இராகம் பாடும்பொழுது விடுபட்ட சில ரஞ்சகமானங்களைத் தானம பாடி...

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




**சுமங்கலி:** ஆசிரியர், இளமைப்பித்தன்; பிரசுரம்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு, புதுக்கோட்டை; விலை: ரூ. 1-0-0.

இது சிறுகதையின் அடிப்படையில்எழுந்த ஒரு நாவல். இதில் வரும் பிரதான பாத்திரங்கள் சாரதாவும் ஜம்புலிங்கமும். இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள். ஆனால் இருவரது காதலிலும் சிறிதளவு வேறுபாடு காணப்படுகிறது. ஜம்புலிங்கம் ஆணுக்கேற்ற, அதாவது மிருகத்தன்மை செறிந்த காமத்துடன்-மனப்பூர்வமாக – வெளிப்படையாகக் காதலிக்கிறான். சாரதாவோ பெண்தன்மைக்கேற்ற அமைதியுடனும் ஆழத்துடனும் இரகசியமாகவும் காதலிக்கிறாள். இதன் விளைவாக இருவரும் தங்கள் காதல் கனிந்து பலன்பெறுவதற்குச் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது.

ஆசிரியர் பிரதான பாத்திரங்களில் உள்ள உணர்ச்சிகளை மிக இயல்பாகவும், இயன்றவரை தெளிவாகவும் வருணித்திருக்கிறார்.

இச் சிறுகதையின் விலை தான் மிக அதிகமென்று தோன்றுகிறது. இன்னும் நாலைந்துகதைகளைச்சேர்த்து ஒரு கதைத்தொகுப்பாக வெளியிட்டிருக்கலாம்.

—விவியன்

●

**மேடம் பவாரி:** மூல ஆசிரியர்: குஸ்தாவ் பிளாபரி; மொழிபெயர்ப்பு எஸ். எஸ். மாரிசாமி; பிரசுரம்: பென் புக்ஸ் 2—A, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை 3; விலை ரூ 2-8-0.

மடாம் பொவாரி என்ற இப் பிரான்ஸியக் கதை ஏறக்குறைய 100 வருடங்கட்கு முன் எழுதப்பட்டது. இந் நூலில் டொக்ரர் ஒருவரது மனைவி சஞ்சல புத்தியினால் நடத்தும் காதல் லீலைகள் வருணிக்கப்பட்டன. இதற்குமுன் இவ்விதமான நாவல்கள் வெளிவரவில்லை. ஆதலால் இந் நாவலைப் படித்த பிரெஞ்சு மக்கள் அனைவரும் ஒரு தவறான அபிப்பிராயம் கொள்ள நேரிட்டது. இத்தகைய அபிப்பிராயத்தை வளர்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் கஸ்ராவ் வ்ளுபயரின் எதிரிகளான ஆசிரியர்களும், மதப்போதகர்களும் பிரசாரமும் செய்தனர். இவ்வித எதிர்ப்பு, எதிர்த்தவர்களின் நோக்கத்துக்கு மாறான பலனை விளைத்தது. கஸ்ராவின் புகழ் அதிகரித்ததுடன், நூலுக்கும் மதிப்பு ஏற்படலாயிற்று. கஸ்ராவிடம் பொறாமை கொண்ட ஆசிரியர்கள் அரசாங்கத்தைத் தூண்டிவிட்டு, இந் நாவலைச் சட்டத்துக்கு விரோதமான நாவலென்று பிரகடனஞ்செய்து தடைசெய்யுமாறு வேண்டினர். பரீஸ் நகர நீதிமன்றத்தில், கஸ்ராவ் வ்ளுபயருக்கு எதிராக, அக் காலத்தில் பிரான்ஸிலேயே சிறந்த வாசாலகரெனப் பெயர்பெற்ற பினுர்ட், அரசாங்கச் சார்பில் வாதிக்கலானார். ஆனால் நீதிமன்றம் கஸ்ராவின் பதில் வாதத்தை ஏற்றுக்கொண்டு அவரை விடுதலை செய்தது.

நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்; மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

ஒரு காலத்தில் மிகவும் கீழ்த்தரமான ரகத்தைச் சேர்ந்தது என எண்ணப்பட்ட இந்த நாவலானது, இக்காலத்தில் சிறந்த இலக்கியமாக மதிக்கப்படுவதுடன் சர்வகலாசாலை மாணவர்கள் வாசிக்கத்தக்கதெனவும் சிபார்சு செய்யப்படுமளவுக்குப் போற்றப்படுகிறது.

எம்மா என்ற கதாநாயகி தனது இளம் வயதிலிருந்தே ஒரு கன்னிமாடத்தில் கல்வி பயின்றவள் அங்கே அவள் இரகசியமாகக் காதல் நவீனங்களைப் படிப்பதுடன். அவற்றில் வரும் கதாநாயகி தானேயென்றும் கற்பனை செய்துகொள்வது அவள் வழக்கம். படிப்பு முடிந்ததும் இவள் தன் தந்தையுடன் ஒரு விவசாயப்பண்ணையில் வசித்து வந்தாள். அப்பொழுதுதான் தனது பிற்காலக் கணவனை முதல் முதல் சந்திக்க நேர்ந்தது. தனது தந்தையையும் டொக்ரர் பொவாரியையும் தவிர அவள் வேறு ஆடவருடன் பழகியதேயில்லை. டொக்ரர் பொவாரி ஏற்கனவே விவாகமாகி மனைவியை இழந்தவர். அங்ஙனமிருந்தும் அவள் அவரை-வேறுபேர் கிடைக்காத காரணத்தால்·விவாகம் செய்கிறாள். சீக்கிரத்திலேயே, டொக்ரர் பொவாரி தனது கற்பனைக்குகந்த காதலன் அல்லன் என்பது அவளுக்குத் தெரிந்துவிட, அவள் தன்னைக் காதலிப்பதாகக் கூறத் துணிவுகொண்ட ஆடவர்களுடன் காதல்புரிகிறாள். தன்னைக் காதலிப்பவர்களுடன் துயில்புரிவதில் பிரமாதமான தவறு எதுவும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. அவ்வளவு தூரத்துக்கு, இளமையிலிருந்தே ஏற்பட்ட கற்பனைச் சுபாவம் அவளைச் சிறந்தவளாக்கிவிட்டது.

தமிழ் மொழிபெயர்ப்பு நன்று. ஆட்களின் பெயரை முன்னுக்குப் பின் முரணாக உச்சரிப்பதும் (பினுர்ட்,மொனுர்ட்) Monse-iour என்பதை மென்ஸியர் என்று மொழி பெயர்த்திருப்பதும்அவ்வளவு சிறந்த முறைஎனத்தோன்றவில்லை. பிழைகளை நீக்கி இந்நூலின் அடுத்த பதிப்பு வெளிவருமென எதிர்பார்க்கலாம்.

—விவியன்

●

**காந்தீய நோக்கு:** ஆசிரியர்: புலவர் நா. சிவபாதசுந்தரன்; பிரசுரம்: அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம், நீர்வேலி, இலங்கை. விலை சதம் 50.

காந்தியத் தத்துவத்தின் உட்கருத்துக்கள் பலவற்றை ஆசிரியர் இந் நூற்கண் சுருக்கித் தந்துள்ளார். மக்கள் வாழ்க்கையின் பூரண வளர்ச்சியில் நம்பிக்கை பூண்டு அதற்காகத் தமது உயிரை அர்ப்பணஞ் செய்த மகாத்மாவின் தத்துவங்கள் காந்தியத்தை அறிந்தவர்களுக்கும் ஏனையோர்க்கும் பயன்படுமென்பதற்கு ஐயமின்று. அறிஞர் திரு ச. பேரின்பநாயகன் அவர்களின் மதிப்புரையைத் தாங்கி இந்நூல்வெளியாகியுள்ளது.

# வானிசை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவு செய்தார். இவர் தானம்பாடிய முறை சம்பிரதாயமாகவும் எடுத்துக்காட்டாகவும் அமைந்திருந்தது. 'சாமிக்குச் சரி எவரே... ' என்ற பல்லவியிற் சில இடங்களில் ஸ்வராக்ஷரப் பிரயோகங்கள் செய்தமை இவருடைய ஞானத்தை விளக்கியது. இராகமாலிகை எதுகுலகாம்போதியிலும மோகனத்திலும் பாடினார். 'அருமருந்தொரு என்ற பாடலை மோகனத்திற் பாடியது பாராட்டுக்குரியது. இப் பாடல் ஏறக்குறைய 300 வருடங்களாக மோகனத்திலே பாடப்பட்டு வந்தாலும் இக் காலத்திற் சிலர் மனம்போன போக்கில் வேறு இராகங்களிலும் பாடுகிறார்கள். திரு. சண்முகரத்தினம் பழைய மெட்டின் உயர்வை அறிந்து முறையாகப் பாடினார். வயலின், பாடகருடன் ஒத்துழைத்தது. மிருதங்கம் சுருதி சேரவில்லை. அடிக்கடி சுருதி சேர்க்கின்ற வழக்கம் நிற்க வேண்டும். பாட்டுக்களைக் குழப்பாத முறையிற் கஞ்சிரா அமைந்திருந்தது.

## பின்வந்த நூல்கள்

ASTHMA: A cure without Drugs—by T. NALLAINATHAN M. R. C. S. *Available*: at Sanmuganathan Book Depot, Vannarponnai, Jaffna; Bastiampillai Book Depot, Jaffna; *Price* 9-00.

**விசாகதத்தர் முத்ராராக்ஷஸம்**- மொழிபெயர்ப்பு: வித்துவான் இ. கே. நடேசசர்மா, பி. ஓ. எல். விலை ரூபா 3-8-0.

**கோதைத்தீவு**-ஆசிரியர்: வ. ரா. விலை ரூபா 2-0-0.

**கர்ப்ப ஸ்திரீகளுக்குச் சில யோசனைகள்** — ஆசிரியர்: டாக்டர் கே. வெங்கடசாமி. விலை ரூபா 3-12-0. இப் [illegible] பிரசுரிப்போர்: [illegible] நிலையம், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

# கண்கவர் பவனி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரோ முன்னர் அப்பதவியை வகித்தவரும் ஆறு குதிரை பூட்டி அழகாக அலங்கரிக்கப்பட்ட ஓர் இரதத்தில் வந்தனர். 'மேயர் வாழ்க!' என்ற வாழ்த்தொலி பலமுறை எதிரொலித்தது. வாழ்த்தினை அங்கீகரிப்பவராய் மேயர் தமது பதவிக்குரிய தொப்பியை எடுப்பதும் வைப்பதுமாகப் புன்னகையுடன் இருந்தார். பழைய மேயர் புது மேயருடன் ஏன் ஒரே இரதத்தில் செல்லவேண்டுமென்று கேட்டேன். இருவருக்கும் இடையிற் பிணக்கு ஒன்றும் இல்லை. பழைய மேயர் தமது பதவியைப் புதுமேயரிடம் ஒப்புவித்துவிட்டார் என்பதைக் காண்பிப்பதற்காகவே இருவரும் ஒருமித்துப் பவனிவருகின்றார்கள் என்று ஆங்கிலச் சங்கத்தின் பிரதிநிதி எனக்குப் பதிலளித்தார். இது எவ்வளவு நல்லமுறை! இலங்கையிலுள்ள மேயர்களும் பட்டினசங்கத் தலைவர்களும் கிராமச்சங்கத் தலைவர்களும் இப்படி நடந்துகொள்வார்களா?

### பிரதிநிதிகள் சபை

அடுத்த நாள் (10-11-50) காலை பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குச் சென்றேன். இலங்கை சுய ஆட்சி பெற்றபடியால் பாராளுமன்றத்தில் எனக்கு இராஜாதிகாரம் பெற்ற தேசத்துப் பிரதிநிதிகளுக்குரிய இடம் கிடைத்தது. கூட்டம் தொடங்க ஆயத்தமானதும் ஒரு மெல்லிய மணி ஓசை கேட்டது. தலைவர்வந்து பீடத்தில் அமர்ந்தார். அங்கத்தவர்கள் எல்லாரும் எழுந்து நின்றார்கள், கடவுள்வணக்கத்துடன் அன்றைய விஷயங்கள் ஆரம்பமாயின. முதலில் மந்திரிசபையாரிடம் அறிவித்தல் கொடுக்கப்பட்ட வினக்கள் கேட்கப்பட்டன. வினக்களும் விடைகளும் விறுவிறுப்பாக இருந்தன. அடுத் தாற்போற் பிரேரணைகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இவற்றின்பின் அரசாங்கத்தின் வீடுகட்டும் திட்டத்தைப்பற்றி விவாதம் நடந்தது.எதிர்க்கட்சியினரின் பேச்சைக் கேட்டபோது '—ம் என்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்' வீடுகள் கட்டி முடிப்பார்கள் போல் தோன்றியது. இது அசாத்தியம் சுத்தப்புளுகு என்று மந்திரி சபையார் பதில் கூறினர்.

### உயிர்ப் பொம்மை!

பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சபைக்குச் சென்று உயிருடன் இருக்கும் பிரமுகர்களைக்கண்டபிறகு அவர்களுக்குமுன் பல தலைமுறைகளாகத் தோன்றிய அரசியல் ஞானிகளைச் சிற்பத்தில் உயிருடன் உள்ளவர்கள்போல அழகாக உருவகித்து வைத்திருக்கும் ரூசோட் அம்மையார் அவர்களுடைய (Madame Tussaud's Exhibition) பிரதரிசனத்தைப் பார்க்கச் சென்றேன். மூன்று பெண்கள் இருந்து பிரவேசச் சீட்டு விற்றார்கள். இவர்களில் ஒருவர் சீட்டு வாங்குபவர்களை உற்று நோக்கியவண்ணமாக இருந்தார். ஏதோ கவனமுள்ள பெண் என்று நினைத்துக்கொண்டு உள்ளே சென்றேன். பின் பல காட்சிகளையும் பார்த்துவிட்டுத் திரும்பினேன். அப்போதும் இந்தப் பெண் ஒரே பார்வையாகப் பார்த்தவண்ணம் இருந்தாள். நண்பர் ஒருவரை விசாரித்தேன். முதலில் என்னைப் பரிகாசஞ்செய்துவிட்டு அது ஒரு பொம்மையென்று எனக்குக் கூறினார். கிட்ட அணுகிப்பார்த்து என் ஐயுறவைத் தீர்த்துக்கொண்டேன்.

ரூசோட் அம்மையாரும் அவரின் கைதேர்ந்த சித்திரகாரரும் செய்த பொம்மைகள் உயிருள்ள மனிதர்கள்போலவே தோற்றமளிக்கின்றன. உவில்லியம்பிற் (1759–1806) முதற்கொண்டு அட்லி ஈறாக உள்ள பிரிட்டிஷ் பிரதமர்களின் உருவங்கள் மண்டபத்தில அழகாகத் தோற்றமளிக்கின்றன. இன்னும் ஆறாவது ஜோர்ச் மன்னர் முதலாம் அரச குடும்பத்தினரும் நெல்சன் முதலாம் போர் வீரர்களும் மகாத்மா காந்திபோன்ற உத்தமர்களும் எமது பிரதமர் சேனநாயகாவைப்போன்ற சுதேசியப்பிரதமர்களும் அங்கே இடம்பெற்றிருக்கின்றார்கள். இக்க உருவங்களின் விசேடம் என்னவெனில் இவை இயற்கையோடமைந்தன. ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள விசேட அம்சங்கள் இந்தப் பொம்மைகளில் நுணுக்கமாகப் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. நிறம், உயரம், பருமன், சாயல், மீசை ஆகிய இவற்றைப் பார்த்தவுடன் பிரதமர் சேனநாயகா அந்த மண்டபத்தில் நிற்பது போலவே காணப்பட்டது. இப்படியே ஒவ்வொரு உருவமும் இந்த மண்டபத்தின் நில அறையில் ஹிட்லர், முசோலினி முதலியோரதும், தேசத் துரோகிகள், இராச துரோகிகள் என்று கருதப்பட்டவர்களதும் பொம்மைகள் வைக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் அங்கே பழைய காலத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களைக் கழுவேற்றுவது போன்ற முறைகள் மூலம் எப்படிச் சித்திரவதை செய்தனரென்பதைக் காண்பிக்கும் சித்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பார்த்தால் பயமாக இருக்கும். ஆகவே, இந்த மண்டபத்துக்குப் பயங்கர மண்டபம் என்று பெயர். இப் பயம் தெளிவதற்காக இதன் அருகாமையில் சிரிப்பு உண்டாக்கத்தக்க ஒரு விளையாட்டு மண்டபம் இருக்கின்றது. இதில் உள்ள வளைந்த கண்ணாடிகளில் எமது சாயல் விநோதமான உருவங்கொண்டதாகத் தோற்றமளிக்கும். ரூசோட் அம்மையாரது பொம்மைகள் உலகப்பிரசித்திபெற்றவை. இங்கே எல்லாத் தேசத்தவரும் இடம்பெற்றிருக்கின்றனர். இவற்றை ஒருதரம் சுற்றிப்பார்த்தால் உலகத்தையும் உலக சரித்திரம் முழுவதையும் பார்வையிட்டதற்குச் சமானமாகும்.

அடுத்த நாள் (11-11-50) 'சாஹா' என்ற கப்பலில் சுவிடினுக்குப் பிரயாணமானேன். வடசமுத்திரம் கொந்தளிப்பாயிருந்தது. ஆகவே கப்பலாட்டம் அதிகம். கப்பலில் நல்ல உணவு கிடைத்தபோதிலும் நாவாயின் அசைவினால் உணவு உடலில் தங்கவில்லை. இரண்டு இரவும் ஒரு பகலும் ஒருவாறு கழிந்தன. 13-11-50 காலை சுவிடினின் மேற்குக்கரையிலுள்ள கொதென்பேக் என்ற பட்டினத்தை நாவாய் அடைந்தது.

— தொடரும்

காங்கேசன்துறையில் ~~~

திறமான ஜெர்மன் சிமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

நியூகோ ட்ரேடிங் கம்பனி

—— காங்கேசன்துறை ——

தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொந்தளிப்பு

செ. சி. பரமேஸ்வரன்

## 1. அரிவி வெட்டு

தெற்கே கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரே வயல் நிலம். அந்த வயல்கள் நிறைய நீண்ட தங்கக் கம்பிகள் குவியல் குவியல்களாகக் குவிந்துவிட்டமை போன்ற நெற் பயிர்கள்; காலைச் சூரியனின் பொற் கிரணங்களால், தங்கக் குன்றுகள் போலத் தோன்றும் வைக்கோற் குவியல்கள்.

இத்தகைய பெரும் பொற் சித்திரத்திற்கு ஆங்காங்கு மரகதமணி மாலை கட்டிவிட்டது போன்ற பசும் புல் மூடிய வரம்புகள்.

இரா முழுவதும் நீங்காமல் இடப்பட்டிருந்த பனித்திரை சூரிய வெளிச்சத்தில் மெள்ள நீங்கிக்கொண்டிருந்தது. வயல்களுக்குள்ளே சனக்கூட்டங்கள் வந்து வந்து பெருகிக்கொண்டிருந்தன.

கவாலி யூருக்குள்ளிருந்து வந்த கூட்டத்திற் பத்துப் பன்னிரண்டு பேர் இருந்தனர். பெண்கள், ஆண்கள், ஏன் கன்னியர்களுங் கூட. வந்தவர்களுக்கெல்லாம் முத்தன் வயதிற் பெரியவன். ஆகவே அவன், "என்ன தங்கச்சி! கொஞ்சம் கெதியாய் வெட்டேன்!" "தம்பி! சும்மாயிருக்கிறுயே; உனக்குமட்டும் கூலி தாறேல்லையோ?" என்றெல்லாம் அடிக்கடி பேசிக்கொண்டிருந்தான்.

அவன் தன்பாட்டுக்குப் பேசிக்கொண்டிருக்க, வேலையுந் தன்பாட்டுக்கு நடைபெறலாயிற்று.

பத்து மணியானபோது தூரத்திலிருந்த தெருவில் புழுதியை வாரிக்கொண்டு வந்த ஒரு கார், தெரு ஓரத்தில் மாநிழலில் நின்றதும் அதிலிருந்து 'வெள்ளை வெளேர்' என்று உடை தரித்த ஒருவர் வெளிப்பட்டுவருவதும் தெரிந்தது. அவர் வெய்யிலுக்காக ஒரு குடையும் பிடித்துக்கொண்டு வரலானார்.

"அப்பு! செட்டியார் வாறூர் போலஇருக்கு, அப்பு!" என்றது வயலில் ஒரு குரல்.

அது முத்தனின் மகள் பூரணியுடைய குரல்; அவளும் தன் சிநேகிதி தெய்வயானையுடன் வயலில் வேலைபார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு வயது பதினைந்தோ, பதினாறோ தானிருக்கும்; அதற்குமேலாகியிராது. அவளுடைய வயதில் அந்தச் செட்டியாருக்கும் ஒரு மகள் இருக்கிறாள். அவள் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறாள். பூரணி தகப்பனின் 'வியர்வை சொட்டும் உழைப்பில்' உதவி பண்ணிக்கொண்டு வயலில் இருக்கிறாள். அழகு சொட்டும் முகங்கொண்ட அவள், இந்த வயதில் படித்துக்கொண்டும், ஆனந்தமாய் விளையாடிக்கொண்டும் இராமல் இவ்விதம் மாய்வதைக்கண்டு மனம் பதைப்பவர் அங்கு யாருமில்லை.

பூரணி சொன்னதைக் கேட்டதும் தெருப்பக்கம் பார்த்தான் முத்தன். "செட்டியார் தான் வாறூர்! கொஞ்சஞ் சுறுசுறுப்பாய் வேலை செய்யுங்கோ! இல்லாவிடில் திட்டுவார்." என்றான்.

"குடை பிடிச்சுக்கொண்டு வாறூரே, மற்றவைக்கில்லாத வெய்யில் அவருக்குமட்டும் சுடுவானேன்?" என்றாள் பூரணி.

சிலர் சிரித்தார்கள். சிலர் மட்டும், "சீ !சும்மாயிரு!" என்று அடக்கினார்கள்.

அருணாசலஞ் செட்டியார் வந்து வயலைப் பார்வையிட்டார். வெட்டி அடுக்கிக்கிடந்த கதிர்களைப்பார்த்தார். அவர் முகங் கடுகடுத்தது.

"சீச்சீ! நெல்லுக் கொஞ்சங்கூட இல்லை; எல்லாம் வெறும் சப்பட்டை!" என்று முணுமுணுத்தார்.

பிறகு கூலிக்காரர்கள் மேல் அவர் கோபப் பார்வைசென்றது. "டேய்! என்னடா செய்யிறியள் விடிஞ்ச நேரந்துவக்கம்?" என்று எரிந்துவிழுந்த பிறகு, "இவங்களுக்கெல்லாம் வீணாய் என் காசைக் கொட்டிக்கொடுக்கிறதும் எனக்கு ஒரு தலைவிதி" என்று சொல்லிக்கொண்டே காரை நோக்கித் திரும்பலானார்.

மனம் நொந்துபோன ஏழைத் தொழிலாளர்கள், "ஹூம்! எல்லாந் தலைவிதி!" "அவரின் வழக்கம் அது!" என்றெல்லாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக்கொண்டு பழையபடி 'நெல் அரிவி' வெட்டத் தொடங்கினார்கள்.

## 2. வெற்றிலையின் உதவி

மத்தியானமாகிவிட்டது. ஏழை மனித உயிர்களைப் பணம் படைத்த மூர்க்கர்கள் துன்பப்படுத்துவது போதாதென்றோ என்னவோ, உச்சி வேளைச் சூரியன் அவர்களை வாட்டி வதைத்துக்கொண்டிருந்தான்.

"ஊம்! சாப்பாடு வருகுது!" என்று அக்கூட்டத்தில் யாரோ சொன்னார்கள். அவ்வளவுதான்! எல்லாருடைய கண்களும் ஊர்ப்பக்கம் பார்த்தன. செட்டியார் வீட்டு வேலைக்காரன் எதையோ சுமந்துகொண்டு வருவது தெரிந்தது. அவனுக்குப் பின்னால் இன்னும் ஒரு ஆள் வருவதும் தெரிந்தது.

"கெதியாய்வெட்டுங்கோ; செட்டியார் வாறூர்போலஇருக்கு!" என்றாள் ஒரு முதிய பெண்.

"அது செட்டியாரல்லப் போல இருக்கே?"

"அது செட்டியாரில்லை சண்முகம் போலத்தானிருக்கு" என்றான் முத்தன் அந்தப்பக்கம் பார்த்துவிட்டு.

"சண்முகமா? அப்படியெண்டால் எழும்புங்கோ, கிணத்தடிக்குப் போகலாம், முகங் கழுவ! சண்முகம் பேசமாட்டார்" என்றான் இன்னெருவன்.

"ஓம்! பொடி ஒரு நல்ல பிள்ளை!"

இவ்விதம் பேசிக்கொண்டு கிணத்தடிக்குப் போன அந்த ஏழை உழைப்பாளர்கள், கைகால் முகங் கழுவிக்கொண்டு சாப்பிடப் போனார்கள்.

கிணற்றைச் சுற்றி வாழைத் தோட்டம் போடப்பட்டிருந்தது. அந்தக் குளிர்ந்த நிழலில் அவர்களை இருத்தி, அந்த வேலைக்காரன் சாப்பாடு பரிமாறலானான்.

செட்டியாரது குமாரன் சண்முகம் வயலைச் சுற்றிப் பார்த்தான். வயலில் முக்காற் பங்குக்கு மேல் அரிவி வெட்டியாகிவிட்டது. ஒரு மூலையில் பொன்மணிகளைப் போன்ற நெற்கதிர்களுடன், கொஞ்சம் பயிர்கள் சாய்ந்துகிடப்பதை அவன் பார்த்தான். தகப்பன் என்னதான், "நெல் விளையவில்லை; அழிஞ்சுபோச்சு!" என்று கத்தித்தள்ளினாலும், 'விளைவு அதிகம் மோசமில்லை' என்பதை உணர்ந்துகொண்டான்.

பின்னால் ஏதோ 'சரசர' வென்று சத்தங்கேட்டுச் சண்முகம் திரும்பிப் பார்த்தான். பூரணம் வெட்டிக்கிடந்த பயிர்களைத் தாண்டிக்கொண்டுவந்தாள். அவன் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டான். இரண்டு, மூன்று நிமிஷங்கள் சென்றிருக்காது. அவனுக்கு மனம் பொறுக்கவில்லை; திரும்பினான். பூரணம் கிணற்றடிப்பக்கம் ஒரு திருட்டுப் பார்வை பார்த்துவிட்டு, ஒரு பாதி வெற்றிலையை எடுத்துச் சுண்ணாம்பு தடவினாள்.

இரண்டுபேர் சந்திக்கும்போது வெற்றிலைதான் அவர்களுக்கு முதல் தூது ஆக அமைவது பெரும்பாலும் வழக்கம். அதே வெற்றிலை சண்முகத்துக்கு, அவளோடு பேசுவதற்கு வழிகாட்டிற்று.

"வெற்றிலை போட இவ்வளவு பயமா?" என்று கேட்டான்.

அவன் குரலைக்கேட்டதும் திடுக்கிட்டு அத்திசை பார்த்தாள் பூரணம். அப்போதுதான் அவன் தன்னைப் பார்த்துக்கொண்டே நிற்பதை அவள் அறிந்தாள். அவன் கேள்விக்கு, "ஓம்." என்று சொல்லியபோது, அவளுக்குக் கொஞ்சம் சிரிப்பு வந்தது.

"ஏன்?" என்று அதிசயப்பட்டான் அவன்.

"அப்பு கண்டால் அடிப்பர்"

"வெற்றிலை போடுகிறதற்கு அடியா? அதென்ன கூத்து!"

பூரணம் தயக்கத்துடன், கலியாணங் கட்டாதவை போடக்கூடாதாம் என்று ஒரு விதமாய்ச் சொல்லிவிட்டு, அப்பாற் போய்விட்டாள்.

அச் சமயத்திற் கிணற்றடியிலிருந்தவர்களும் வந்துசேர்ந்துவிட்டார்கள். ஆகவே சண்முகத்துக்கு அவளுடன் பேச வசதிப்படவில்லை. அது அவனுக்குப்பெரும் ஏமாற்றமாக இருந்தது. — தொடரும்


# யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட டிபாசிட்டுகள்:
டிபாசிட்டுப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
திருப்பர்

[4335]


# வீரத் தமிழர் காப்பியம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி வரலாறு கூறும் முதற் செய்திகளில் இது ஒன்றாகும். கண்ணகியின் உருவச்சிலை இலங்கைப் பொருட்காட்சி மண்டபத்தில் இருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

விழாப் பந்தலுக்கு அன்பர்களை அழைத்துச் செல்லுமுன் காவிரிப்பூம் பட்டினத்தைப்பபற்றிச் சிறிது கூறுவோம். காவிரி ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் அமைந்த, துறைமுகமுள்ள, அழகிய நகரம் என்ற பொருளில் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டது. ஆறு கடலுள் புகும் இடத்திலுள்ள ஊர் என்பதைக் குறிக்க இதைப் (புகு ஆறு) புகார் என்றுங் கூறுவர். இங்கே சோழ அரசரது அரண்மனையும் பெருங்குடி மக்களின் மாளிகைகளும் பல கோவில்களும் நாடகசாலைகளும் ஆடலரங்குகளும், அரச வீதிகளும் வேறுபட்ட கருத்துக்களை விவாதிக்குமிடமான பட்டி மண்டபமும் பாங்குறத் திகழ்ந்தன என்றெல்லாம் 10 ஆண்டுகளுக்கு முன், சென்னை அரசினர்க் கல்லூரியில், பி. ஏ. வகுப்பு மாணவனாயிருந்தபோது பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு நூலில் படித்திருந்தேன். இவ்வளவு சிறப்பான ஊர், இன்று காவிரிப்பூம் பட்டினமா? அது எங்கே இருக்கிறது? என்று தமிழர்கள் கேட்கும் நிலையில் குன்றிக் [illegible] இருக்கிறது. [illegible]த்தில் என்ன மொழி பேசுகிறார்கள்? என்று சில ஆண்டுகளுக்குமுன் சென்னையிற் பலர் கேட்டதைப் போன்றதே இந்தக் கேள்வியும்.

### அன்றும் இன்றும்

காவேரிப் பட்டினம் என்ற பெயரே இன்று இவ்வூருக்கு உண்டு. பூம் என்ற அடைமொழி நகரின் எழிலைக் குறிப்பது. இன்றைய நகரம் அழகின்றி யிருந்தபோதிலும், அதனுடைய பெயர் சிதைவதை யான் விரும்பவில்லை. நல்லகண்ணுப்பிள்ளை என்ற ஒருவர்க்கு, பிற்காலத்திற் கண்கள் குருடாகிவிட்டால், அதற்காக அவர் பெயர் மாறுவதில்லையே?

காவிரிப்பூம் பட்டினத்தில் இப்போது ஒரு சில வீடுகளும், சில கோயில்களும், குட்டிச்சுவர்களுமே உள்ளன. பொலீஸ் நிலையம், தந்தி அஞ்சல் நிலையம், உயர்நிலைப் பள்ளிக்கூடம் ஆகியவைகூட அங்கே இல்லை. உணவு விடுதிகளும் அங்கே இல்லை எனலாம். வரலாற்றில் சிறப்புப் பெற்ற இந்த நகரின் பெரும் பகுதியைக் கடல் விழுங்கிவிட்டது. கடலின் மீன்கள் பல வந்து ஒதுங்க, கடல் நடுவே பல கட்டிடங்கள் உள்ளன என்றும், பெரும் பெரும் மேடு பள்ளங்கள் காணப்படுவதாயும் பரதவர் பலர் கூறுகின்றனர். சற்றேறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்னர் கடலிலிருந்து முருகனின் திருவுருவம் ஒன்று பரதவரின் வலையிற் சிக்கிக் கரை சேர்க்கப்பட்டது. இப்போது அது சாயாவனம் எனுங் கோயிலிற் காட்சி தருகின்றது. திருவலம்புரியிலுள்ள பிட்சாண்டார் வடிவத்தையும் யான் கண்டு அகமகிழ்ந்தேன். இது தங்கம், வெள்ளி, செம்பு போன்ற பஞ்சலோகங்களிற் செதுக்கப்பட்டது. இப்பொழுது கடலோரத்தில் நெய்தவாசல் என்னும் சிற்றூர் இருக்கிறது. இதுவே நெய்தலங்கானலாக இருக்கக் கூடுமென்று அறிஞர் கருதுகின்றனர். இன்றைய வாணகிரியை அன்றைய வணிகபுரியாகக் கொள்ளலாம். திருக்கடவூரில் மாதவிமனை, மாதவி குட்டை என்ற இடங்கள் இன்றும் உள்ளன. சிலப்பதிகாரத்திற் சொல்லப்பட்ட ஊர் காவற் தெய்வமாகிய சம்பாபதி அம்மன் கோயில் இன்றளவும் இருக்கிறது. இக் கோயில் தஞ்சைக் கோயிலுக்கு முற்பட்டதென்பது, கல்லும் சுண்ணாம்பும் உள்ள நிலைகொண்டு அறியலாம். இக்கோயிலின் மண்டபங்கள் தற்பொழுது இரண்டாகப் பிளவுபட்டுள்ளன. இக் கோயிலைச் சிலர் சமபாதி அம்மன் கோயில் என்று கூறுகின்றனர். ஊரின் நடுவிடத்தில் இக்கோயில் இருந்ததால் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

அலங்கரிக்கப்பட்ட யானை மீது சிலப்பதிகார நூல் வலம் வர, விழா தொடங்கிற்று. திருமண வைபவங்களையும், பெண்களே யானை மீதேறி அறிவிப்பது சிலப்பதிகார காலத்தில் வழக்கமாக இருந்ததாம். இந்த ஊர்வலத்தில் நாதசுவரம் வாசித்தவர் திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆவர்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பான மருமக்களே!

அனைவருக்கும் வணக்கம். எனது மருமக்களிடமிருந்து வரும் கடிதங்கள் நாளாந்தம் கூடிக்கொண்டே வருகின்றன. அக் கடிதங்களைப் படித்துவிட்டு எனது மருமக்களுக்குப் பதில் எழுதவேண்டும். அத்துடன் அவர்கள் அனுப்புங் கட்டுரைகள் கதைகள் என்பனவற்றைத் திருத்திப் பிரசுரிக்கவும் வேண்டும்.

ஒரு பக்கத்தில் அழகாகவுஞ் சுருக்கமாகவும் எழுதப்படும் விஷயங்களைப் படிப்பதற்கு எனக்கு மிகுந்த ஆசை. பென்சிலால் விளக்கமின்றி எழுதியனுப்பப்படும் விஷயங்கள் எனக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. மாணவ மாணவிகளான எனது மருமக்கள் இதனைக் கவனித்து அழகாக எழுதப் பழகிக்கொள்ள வேண்டும்.

மருமக்கள் கடிதங்கள் அனைத்தையும் இங்கு பிரசுரிப்பது இயலாத காரியம். அவசியமெனக் காணப்படுங் கடிதங்களைப் பிரசுரிப்பேன்.

மருமகன் ம. த. லோறன்ஸ் என்பவர் ஈழகேசரி பாலர் பகுதி அன்பர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள விரும்புகின்றார். அவருடைய விலாசம் வருமாறு: சிவாநந்த வித்தியாலயம், கல்லடி-உப்போடை, மட்டக்களப்பு.

பாலர் பகுதியில் வெளியாகும் விஷயங்களைப் பாராட்டி மருமக்களிற் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றார்கள். அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

கேசரிமாமா

இலக்கியச் செல்வம் 12

# திருக்குறள் — ஊழியல்

- - கே. எஸ். கிருஷ்ணன் - -

ஒன்றை நினைக்கின்
அதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும்
வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து
நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற உலக வழக்கு இவ் வெண்பாவின் கருத்தைத் தழுவியது. ஒளவையார் 'ஈசன் செயல்' என்று கூறியதை இப் பழமொழி தெய்வம் எனக் கூறிற்று. திருவள்ளுவர் ஊழ் என்று வழங்குகின்றார். ஊழ் என்ற சொல்லை விளக்கவந்த பரிமேலழகர், 'ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி யென்பன ஒரு பொருட் கிளவி' என்று உரை கண்டிருக்கிறார். மனித அறிவிற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளை இச் சொற்கள் குறிக்கின்றன. மனிதனால் முற்றும் உணரமுடியாதவை அவை.

அறத்துப்பால் ஊழியல் 'ஊழ்' என்ற ஒரு அதிகாரமுடையது. அதிலுள்ள பத்துக் குறள்கள் ஆழ்ந்த கருத்தையும் அற்புதக் கற்பனையையும்கொண்டு படிப்போரின் உள்ளத்தைச் சிந்தனையில் ஆழ்த்துகின்றன.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற பெருமையுடைய முயற்சிக்கும் முயற்சியளிப்பது ஊழ்; முயற்சி யின்மையாகிற மடியின் காரணமும் ஊழ்தான் என்பது திருவள்ளுவர் கொள்கை:—

ஆகூழால் தோன்றும்
அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

ஒருவன் செயற்கையறிவால் எத்துணை மேம்பட்டவனாக விருப்பினும் அவனுடைய இயற்கையறிவே மிகுந்து நிற்கும்.

நுண்ணிய நூல்பல
கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

அறிவுடையார் பெரும்பாலும் வறியராயும் செல்வமுடையார் அறிவிலராயும் இருப்பதைக் கண்ட வள்ளுவர் அது ஊழ்வினைப்பயன் என்கிறார்.

இருவேறு உலகத்
தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

நல்லவை யென்று ஒருவன் கருதுவது தீயவையாகப் பரிணமிக்கக் கூடும். அதேபோல தீயவையும் நல்லவையாக மாறக்கூடும். அது மனித அறிவிற் கப்பாற்பட்டது:-

நல்லவை யெல்லாம்
தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வஞ் செயற்கு.

பொருள்தனை எப்படிப் போற்றினும் அழியவேண்டியிருப்பின் அது அழியவே செய்யும். எவ்வளவு அழிந்தாலும் நிலைபெற்றிருக்க நியதியிருந்தால் அது நிலைத்திருக்கும்.

பரியினும் ஆகாவாம்
பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

செல்வம் மிகுதியாக உடையோருக்கும் அதை நுகர்தல் ஊழ்வினைப் பயனால் வருவதொன்றாகும்.

வகுத்தான் வகுத்த
வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது.

'எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்கவேண்டும்', 'கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை' என்ற பழமொழிகள் இக் குறளின் கருத்தைத் தழுவி வந்துள்ளன.

## மாமா பதில்

**மே.490. ந. டே. குணரத்தினம்:** மருமகனே, உமது விஷயங்களைக் கவனித்தேன். உற்சாகத்துடன் எழுதவும். கவிதை கிடைத்தது. அதைப் பிரசுரிக்க முடியாது வருந்துகிறேன்.

**மே.403. ம. த. லோறன்ஸ்:** உமது கடிதத்தை மிக ஆர்வத்துடன் படித்தேன் கட்டுரைகளை வெளியிடுவேன்.

**மே.492. க. இராஜேஸ்வரி:** மருமகளே, அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் மூன்று பக்கங்களுக்குமேல் எழுதவேண்டாம். சுருக்கமாக எழுதப் பழகவேண்டும்.

**மே.472. அ. மகாலிங்கம்** பாட்டு நன்று. அதை வசனத்தில் எழுதி அனுப்புக.

**மே.28. சு. பிரேம சம்பு சர்மா:** உமது கதை கிடைத்தது. நன்று.

**கி.509 சு. செபநேசன்:** உமது பெயருடன் பாலர் பகுதிப் பதிவு இலக்கத்தை எழுதவேண்டும்.

**மே.80. வி. சுப்பிரமணியம:** உமது கட்டுரையைச் சுருக்கமாக எழுதி அனுப்பவும். மூன்று பக்கங்கள் போதும்.

**கி. 310. அ. தி. ஜோதிமலர்** உமது கடிதம் படித்து மகிழ்ந்தேன்.

**மே.514. மயிலை சண்முகம்:** நீர் சந்தாதாரகச் சேர்ந்துகொள்வதே நன்று. ஈழகேசரி வருட சந்தா ரூபாய் 6—00.

## புதிய மருமக்கள்

மே.514. மயிலை சண்முகம், தபால் நிலைய அதிகாரியின் வங்களா, கீழ்ப்பாக்கம், சென்னை 10.

மே.515. த. காசிராசா, எஸ். எஸ். வி. பிறெப், இந்துக் கல்லூரி, உரும்பராய்.

மே.516. ந: துரைராஜ், 21 அகலவத்தை, மாத்தளை.

மே.517. க. பேரின்பநாதன், கே. சின்னப்பாவாசா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி,

கி.518. செ. ஞானப்பு, c/o தலைமை ஆசிரியர், பாப்பாமோட்டை, றோ. க. பாடசாலை, மன்னார்.

உங்கள் அனைவரையும் மருமக்களாக ஏற்றுக்கொண்டேன்.

இன்ப துன்பங்கள் வாழ்க்கையில் மாறிமாறி வருவது இயல்பு. இன்பத்தை விரும்பி அனுபவிக்கிறார்கள். ஆனால் துன்பம் வந்துற்றபோது பொறுமை யிழந்து அல்லற் படுகிறார்கள்.

நன்றாங்கால் நல்லவாக்
காண்பவர், அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்?

அவ்வாறு அல்லற்படுதலால் துன்பம் மிகுமே யொழிய வேறில்லை. நிலையாமை, மெய்யுணர்வு, துறவு, அவாவறுத்தல் முதலிய அறவொழுக்கங்களிற் பழக்கமுள்ளவர் நல்வினை தீவினைகளால் விளையும் இன்ப துன்பங்களை விருப்பு வெறுப்பற்றுத் துய்ப்பர்.

இதுவரை விரிவாகக் கூறிவந்த ஊழின் செயல்களையும் ஆற்றலையும் ஒருங்கே திரட்டி இவ் வதிகாரத்தின் ஈற்றுக் குறளில் கொடுத்திருக்கிறார்:-

ஊழிற் பெருவலி
யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.



அமெரிக்காவின் யுத்தப்படை அதிகாரி தளபதி ஜே. லோட்டன் கோலின்ஸ் அவர்களுடன், தளபதி ஜேம்ஸ் வான் பிளீட் சம்பாஷிக்கின்றார். வான் பிளீட் இப்போது கோரியாவிலுள்ள அமெரிக்கப் படையின் அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

# எனது கிராமம்

மே. 403. ம. த. லோறன்ஸ்

மட்டக்களப்புப் பட்டினத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ளது எனது கிராமம். அதன்பெயர் கல்லடி—உப்போடை என்பது. இப்பெயர் ஓர் காரணப்பெயரானாலும், எக்காரணத்தால் இப்பெயர் இக்கிராமத்திற்கு ஏற்பட்டது என்பது அறியமுடியாததாகவே இருக்கின்றது.

எனது கிராமத்திற் பல சாதி மக்களும் ஒற்றுமையாக வசிக்கின்றார்கள். இவர்களிலே தமிழர்களே அதிகமானோர்.

இங்கு சிவாநந்த வித்தியாலயம் என்ற உயர்தர ஆங்கில பாடசாலையும், அதனருகில் ஓர் உயர்தரப் பெண்கள் தமிழ்ப் பாடசாலையும் உள்ளன. இவ்விரு பாடசாலைகளாலேயே எனது கிராமம் சோபையுடன் விளங்குகின்றதெனக் கூறலாம்.

இங்கு வசிப்பவர்களில் அதிகமானோர் சைவர்கள். கிராமத்தின மத்தியில் பிள்ளையார்கோயில் ஒன்று உளது.

கிராம முன்னேற்றச் சங்கம், ஜனசமூக நிலையம், வாசகசாலை ஆகியவை பல்லாண்டுகளாக, கிராமத்தின் முன்னேற்றத்தையே அடிப்படையாகக்கொண்டு கிராமத்திற்குப் பணி புரிந்து வருகின்றன.

எங்கள் கிராமச் சங்கத் தலைவர் திரு. க. கந்தசாமி அவர்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகப் பல அரும் பணிகளைச் செய்து வருகின்றார். உப தபாற்கந்தோர், சிறு வைத்தியசாலை, சிசு பரிபாலன நிலையம் என்பன இங்கு இருக்கின்றன.

சென்றமுறை கிராமச்சங்க அங்கத்தவர்களையும், அக்கிராசனரையும், எதுவித போட்டியுமின்றித் தெரிவு செய்த பெருமை எனது கிராமத்துக்கே உரியது.

எனது கிராமம் புண்ணியம் செய்ததோர் கிராமமாகும். யாழ்நூல் தந்த விபுலாநந்த அடிகளாரின் சமாதி இக்கிராமத்தின் மத்தியிலுள்ள சிவாநந்த வித்தியாலயத்திலேயே இருக்கின்றது.

எனது கிராமத்தை ஒரு பக்கத்தில் வங்காள விரிகுடாக் கடலும், மறுபக்கத்தில் மட்டக்களப்பு வாவியும் சூழ்ந்துள்ளன. இதனால் எனது கிராமத்தில் வாழும் சிலர் மீன் பிடியையே தொழிலாகக் கொண்டுள்ளார்கள். எனது கிராமத்திற்குச் சமீபத்திலுள்ள எருமைத் தீவு என்ற கிராமத்தில் வேளாண்மை சிறந்து விளங்குகின்றது.

எனது கிராமத்திலே தென்னை மரங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. எனது கிராமம் இயற்கை அழகுடன் பொலிந்து விளங்குகின்றது!

கல்லடி—உப்போடை பல துறைகளிலும் முன்னேற வேண்டுமென்பதே எனது பேரவா.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

1-7-51—7-7-51

மே.18. வி. சோதிலிங்கம்; மே.45. அ. விக்னேஸ்வரன்; மே.67. ச. தம்பிராசா; மே.86. க. செ. கந்தசாமி; மே.96. ஏ. இரத்தினலிங்கம்; மே.104. கா. சப்தகிரீஸ்வரசர்மா; மே.171. வ. குணசேகரம்; மே.178. பொ. சதாசிவம்; மே.265. இ. இராசமனோகரன்; கி.321. க. இராஜசிங்கம்; கி.353. இ. கிரிசாம்பிகை; மே.386. இ. இரத்தினசபாபதி; மே. 447. எஸ். எம். ஹனிபா; மே. 474. கா. சிவரத்தினம்;

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

..................................................

பிறந்ததிகதி: ..................................................

..................................................

தந்தை தாயார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத் தமிழர் காப்பியம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவெண்காடு விழா நடந்த இடத்திலிருந்து 4 கட்டைத் தொலைவிலுள்ளது. இங்குள்ள கோயில் காணத் தகுந்த ஒன்றாகும். இது சுந்தரர் அப்பர் சம்பந்தர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. சிலப்பதிகாரத்திற் குறிப்பிடப்பட்டிருக்கும் சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற குளங்கள் இங்கே இன்றளவும் உள்ளன. இவ்வூர் முற்காலத்திற் காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு பகுதியாக விளங்கிற்றும்.

## கலை விழா

மாநாடு பல்லவனேசுவரத்தின் அதற்கென அமைக்கப்பட்ட பெரியதொரு பந்தலிற் கூடியது. மேடை அமைப்பும் மற்ற ஏற்பாடுகளும் நல்ல மாதிரியாகச் செய்யப்பட்டிருந்தன. சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ்நாட்டில் மேடை அமைப்பும் விளக்கு அமைப்பும் சிறப்பாகச் செய்யப்பட்டதை மாநாட்டில் டொக்டர் மு. வ. அவர்கள் தம் உரையிற் குறிப்பிட்டார்களாம். இவ் விழாவில் அவர்கள் ஆற்றிய அரிய சொற்பொழிவை யான் கேட்க இயலவில்லையாதலால், விழா மேடை அமைப்பை முற்காலத்து முறையோடு ஒப்பிட இயலாதவனாயிருக்கிறேன். **குளம் தொட்டு வளம் பெருக்கியவன் தமிழன். கற்கோயில் கண்டவன் தமிழன்** என்ற வாக்கியங்கள் மேடையின் அருகில் பொறிக்கப்பட்டிருந்தன. மேடைக்கு அருகேயே சிறந்ததொரு கோயிலுங் குளமும் இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கின. பெண்ணினத்தின் சிறப்பைக் கூறும் இக்காவிய விழாவில் ஒரு நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் பங்குபெற்றனர். வெளியூர்களிலிருந்து ஈராயிரம் ஆண்கள் வந்திருந்தனர். பெரும் புலவர்களும், பெருஞ் செல்வர்களும், தமிழ் நாட்டில் மிகப் பெரிய பதவிகளிலுள்ளவர்களும் காட்சிக் கெளியராய் மேடைமீது அமர்ந்திருந்தனர். யவனர், கிரேக்கர் போன்ற மேனாட்டார் பலர் வாழ்ந்த இந்நகருக்கு வெளிநாட்டார் ஒருவரே இவ் விழாவிற்கென வந்திருந்தார். அவர் செய்சாக் அடிகள் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் ஆவார். பிரான்சைச் சேர்ந்த இவர் தமிழ்ப்பற்று உடையவர். பீ. ஏ. வகுப்புத் தமிழ்த் தேர்வில் இவர் வெற்றிபெற்றிருக்கின்றார். விழாவுக்குத் தொகுப்பாக வந்தவர்களுள் திருச்சிற்றம்பலத்தில் காந்திய முறைப்படி அடிப்படைக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர் ஐம்பதின்மரைக் குறிப்பிடலாம். காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சமயப் பேராசிரியராயிருந்த மு. அருணாசலம் அவர்கள் மேற்பார்வையில் இக் கல்லூரி நடை[பெற்று] வருகிறது. இம் மாணவர் நாள்தோறும் தேவாரப்பாடல்கள் பாடிப் பிரார்த்தனைக்கூட்டம் நடத்தினர். இக்கூட்டம் ஒன்றில் அவிநாசிலிங்கம் அவர்கள் பேசினார்கள். குழந்தைகட்கு ஆசிரியர்கள் நம்பிக்கையை ஊட்டவேண்டுமென்றும், ஆசிரியர்கட்கு உயர்ந்த நோக்கமும் சகிப்புத்தன்மையும் வேண்டுமென்றும் அவர்கள் கூறினார்கள். விழா ஆரம்ப தினத்திற் சாதாரண மக்கள் பலர் வந்திருந்தனர். அவர்களால் அமைதிக்குறைவு ஏற்பட்டபோது கீழப்பெரும்பள்ளம் உயர்நிலைப் பள்ளிக்கூட மாணவத் தொண்டர்கள், விழா நிகழ்ச்சிகள் நன்கு தடையின்றி நடைபெறப் பாடுபட்டனர். இப்பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராகிய முருகையா பிள்ளை அவர்களே இவ்விழா நடைபெற முக்கிய காரணமாயிருந்தவர்கள் என்பதை ஈண்டுத் தெரிவிக்க விரும்புகிறேன்.

## கடற்கரையில்

மின்சார வசதி இல்லாமையால், ஒவ்வொரு நாளும் பிற்பகல் 5–30க்கே மாநாடு கலைந்தது. முற்பகலில் இரண்டரை மணி நேரத்திற்கும் பிற்பகலிலும் அதேகால அளவுக்கும் மாநாடு நடைபெற்றது. இதன் விளைவாக, அங்கே வந்திருந்த அன்பர்களைத் தனியே காணவும் வரலாற்றுச் சிறப்புள்ள பல இடங்களுக்குச் செல்லவும் வாய்ப்பு மிகுதியாக இருந்தது. காவிரி கடலொடு கலக்குமிடத்திற்குச் சென்று புலவர் பெருமக்கள் காலை, மாலைப் பொழுதுகளைக் கழித்தனர். இந்தக் கடற்கரையிற்றான் கோவலன் கானல் வரியைப் பாடினான். அழகிலும் ஆடல் பாடலிலும் சிறந்து விளங்கிய மாதவி, பிறரைத் தம் வயப்படுத்துவதற்காக 32 வகையான வாசனைப் பொருள்களை இக்கடற்கரையில் பயன்படுத்தியதுபோல, தமது விரிவுரைகளைக் கேட்போரைத் தம் வயப்படுத்துவதற்காகப் புலவர்களும் இங்கே பலவகை வாசனைப்பொருள்களைத் தடவிக்கொண்டனர். காவிரிக்கும் புலவர்கட்கும் உள்ள உறவு 2500 ஆண்டுகட்கு முன் ஏற்பட்டதாகும். காவிரி பாராட்டப்படாத தமிழ் இலக்கியம் இல்லை எனலாம். இதற்குக் காரணம் தமிழ் நாட்டை ஊட்டி வளர்க்கும் பெருமை காவிரிக்கே உண்டு என்பதே. கடற்கரைக்கு வந்த புலவர்கள் சிலர் போட்டிபோட்டுக்கொண்டு உருக்கமான பல நாடோடிப் பாடல்களையும் கானல் வரியையும் பாடி மகிழ்ந்தனர். இது கிடைத்தற்கரிய காட்சியாயும் கலை விருந்தாயும் இருந்தது.

காவிரிப்பூம் பட்டினத்தின் ஒரு பகுதியான மேலையூர் இராமலிங்கம் பிள்ளை என்ற பெருஞ் செல்வர் வரவேற்புக் குழுத் தலைவராய்ப் பணியாற்றினார். இவ்விழா இங்கே சிறப்பாக நடைபெறப் பொருளுதவியதோடு பல மாதங்களாக இவர் அரும்பாடுபட்டார் என அறிந்தேன். தம் எண்ணம் ஒன்று உருப் பெற்றுவிட்டதென இவர் வரவேற்புரையில் தெரிவித்தார். இப்பட்டினத்தைப் பற்றியும் சிலப்பதிகாரச் செய்திகளைப் பற்றியும் இங்கு குழுமியுள்ள புலவர் பெருமக்கள், அறிஞர்கள், இவர்களைவிட நாங்கள் ஒன்றும் அறிந்திருக்கவில்லை. ஆனாலும், பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்ற வகையில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த இந் நகரத்தில் வாழ்வதை உணருகிறோம் என்று அவர் குறிப்பிட்டது மிகப் பொருத்தம். உண்மையும் ஆகும். முன்னிருந்த நிலையில் சிறந்த துறைமுகம் திகழவும் புதை பொருள் ஆராய்ச்சி தொடங்கவும் அரசியலார் முன்வர வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

## இலக்கியப் பெரியார்

கௌரவ மந்திரி பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டையும், பத்தினிப் பெண்ணின் படிவத்தையும் திறந்து வைத்தார்கள். சென்னை அரசியலாரின் பொதுப் பணி அமைச்சரான இவர் தென்னிந்தியாவில் மிகுதியான செல்வாக்குடையவர். உயரமில்லாதவர்களே உலகிற் செயற்கரியன செய்வர் என்பதற்கு இவரும் ஒரு சான்று. சிறு துறைமுகம், மின்சாரம் ஆகிய இரு பகுதிகளும் இவர் பொறுப்பில் உள. இவ்விரண்டுமே இன்று பூம்புகாருக்கு வேண்டுவன.

சிலப்பதிகாரக் கதைக்குத் தலைவியாகக் கண்ணகி இருந்ததுபோல், இவ் விழாவுக்கு உயிர் நாடியாக விளங்கியவர் டொக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்கள். இப் பெரியார் இன்றேல், இம் மாநாடு இல்லை என்று கூறலாம். இவர் பொருளாதார அறிஞர் மட்டுமல்ல, இலக்கியப் புலவரும் ஆவார். சிலப்பதிகாரத்தின் முதற் காண்டமாகிய புகார்க் காண்டத்திற்கு இவர் உரை எழுதியுள்ளார். கொச்சி இராச்சியத்தில் திவானாக இருந்தபோது, அங்குள்ள வஞ்சி நகரிற் புதைபொருளாராய இவர் ஏற்பாடு செய்தார். இவர் தலைவராக அமைந்ததே மாநாட்டின் வெற்றிக்கு உறுதியாக இருந்தது. இவர் 20 ஆண்டுகட்கு முன் இந்தியப் பிரதிநிதிகள் சபையின் தலைவராயிருந்தார். பிரதிநிதிகள்சபையில் முறையைப் பின்பற்றி இவர் சொற்பொழிவாளரின் பெயர்களை மட்டுமே தெரிவித்தார். அவர்களை அறிமுகப்படுத்தவில்லை. இதை ஒரு பெரிய குறையாகவே எல்லோரும் கருதினர். சித்திரைக்குச் சித்திரை சிரா பவுர்ணமியில் இங்கே ஆண்டுதோறும் நடைபெற்ற இந்திரவிழாப்போல இலக்கியப் பெருமை சான்ற விழா ஆண்டுதோறும் கோலாகலமாக விளங்கவேண்டுமென்று இவர்கள் தலைமை உரையில் தெரிவித்தார்கள்.

திரு. தண்டபாணி தேசிகர் அவர்களுடைய இன்னிசை விருந்து மிக அருமையாக அமைந்திருந்தது. **பூம்புகார் போற்றுதும்** என்ற பாடலை அவர்கள் பாடிய பான்மையில் மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. **ஐஞ்செஞ் சீறடி** என்று தொடங்கிச் சிலம்பை வருணிக்கும் அடிகளையும் அவர்கள் சிறப்பாகப் பாடிக் காட்டினார்கள். சிலப்பதிகாரத்தில் வரும் மங்கலமான இசைப் பாடல்களைத் தேசிகர் அவர்கள் பாடியது பற்றி மகிழ்ச்சி தெரிவிக்கும் போது, **தமிழிசைச் சங்கத்தின் நோக்கம் இன்றுதான் சிகரத்தை அடைந்திருக்கிறது** என்று சண்முகம் செட்டியார் அவர்கள் இறுமாப்போடு கூறினார்கள்.

சிலப்பதிகார விழாவில் இருபதுக்கு மேற்பட்ட அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றினர். அவர்கள் அனைவரையும் பற்றிக் குறிப்பிடுவது இயலாதாகையால் ஒரு சிலரைப்பற்றி மட்டும் கூறுவாம்.

## அறிஞர்கள் விரிவுரை

அவிநாசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்து தமிழ் மொழிக்குப் பணி செய்தவர்கள். தமிழ் வளர்ச்சிக் கழகத்தைத் தோற்றுவித்து அதன் வாயிலாகத் தம் பணியை இவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார்கள். உயர்

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தா விபரம்
ஆண்டுச் சந்தா :
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

The
# EeLAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH
T'Phone No. 805

Vol. 22 | Chunnakam, Sunday, July, 1, 1951 | No. 1

## வீரத் தமிழர் காப்பியம்

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலைப் பள்ளிக்கூட மாணவர் கட்டாயம் தாய் மொழியைக் கற்கவேண்டுமென்று சென்ற ஆண்டில் போராடி வெற்றி பெற்ற பெருமையும் இவர்கட்கு உண்டு. இவர் மணமாகாதவர். இராமகிருஷ்ண மடத்திற் நோன்பு பூண்டவர். பெரிய நாயக்கன் பாளையத்தில் வித்தியாலயத்தைத் திறமையாக நடத்தி வருபவர். இனிய இயல்புடைய இவரும் காலஞ்சென்ற பெர்னார்ட் ஷோவைப் போல, கடந்த 40 ஆண்டுகளில் இரு முறையே பொறுமை இழந்திருக்கக்கூடும். இவ் விழாவிற் பேசும்போது அவர் பொறுமை இழந்ததால் இதைக் குறிப்பிடுகிறேன். ஒலிபெருக்கி அவர் பேசிக்கொண்டிருந்தபோது வேலை செய்யாமல் நின்றுவிட்டபடியால், உரிய தொழிலாளர்மீது அவர் கோபப்பட்டார். **குணமென்னுங் குன்றேறி நின்றார் சினம் கணமேயும் காத்தலரிது** அன்றோ? உலக மொழிகளுடன் தமிழ் உரிய இடம்பெற வேண்டும், அதற்குத் தொடர்ந்த முயற்சிகளும் ஆழ்ந்த சிந்தனைகளும் இன்றியமையாதவை, மட்டமான குழந்தைப் பத்திரிகைகளைப் பெற்றோர் ஆதரிக்கக்கூடாது என்ற கருத்துக்களை அவினாசிலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள்.

புகார், மதுரை, வஞ்சிக் காண்டங்களைப்பற்றி டொக்டர் மு. வ, பேராசிரியர் சேதுப்பிள்ளை, **கலைமகள்** ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஆகிய மூவரும் விரிவாகப் பேசினர். தமக்குள் பகைவராயிருந்த மூவேந்தரையும் சிறப்பிக்கும் இலக்கியமாகச் சிலப்பதிகாரம் இருப்பதைச் சேதுப்பிள்ளை அவர்கள் தெள்ளத் தெளிய எடுத்துரைத்தார்கள். அடியார்க்கு நல்லார் கூறியிருப்பது **ஆறிய** (அமைந்த, அடக்கமான) கற்பு, **ஆரிய** கற்பு அன்று என்பதையும் இலக்கியக் கண்ணகிக்கும் சினிமாக் கண்ணகிக்கும் உள்ள வேறுபாடுகளையும் அவர்கள் விளக்கினார்கள். கண்ணகியைத் தெய்வமாகக் காட்டும் காண்டத்தைப்பற்றிப் பேசிய ஜகந்நாதன் அவர்கள் சேரநாட்டிற் கோயில் எடுத்த காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டினார்கள்.

### முத்தமிழ்நிலைக்களன்

**சிலப்பதிகாரமும் பிற்கால இலக்கியங்களும்** என்ற தலைப்பில் டொக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் பேசினார்கள். இவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக இருந்தவர்கள். விபுலாநந்த அடிகளார் டொக்டர் சாமிநாதையர், கா. சுப்பிரமணியபிள்ளை, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், ரா. பி. சேதுப்பிள்ளை ஆகிய பெரும் புலவர்கள் வகித்த தமிழ்ப் பேராசிரியர் பதவியை இவர்கள் தில்லையின் எல்லையில் இப்போது திறமையுடன் வகிக்கின்றார்கள். இவர்கள் நல்ல இளைஞர்; நட்புக்குரிய நண்பர். உயர்ந்த பண்பாடுகள் இவர்களிடம் மிகுதியாயுள. ஆராய்ச்சிக்கட்டுரை எழுதித் தமிழில் முதலில் டொக்டர் பட்டம் பெற்றவர்கள் இவர்களேயாவர். இவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை தமிழ்ச் செய்யுள் வரலாறு பற்றியது. கலிங்கத்துப் பரணி, கம்பராமாயணம் போன்ற பல நூல்களிலுள்ள கருத்துக்கள் பண்டைய நூலான சிலப்பதிகாரத்தில் இருப்பதை எடுத்துக்காட்டி, அவ்வாசிரியர்கள் இளங்கோவடிகட்குக் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, மக்களின் ஆரவாரத்தோடு டொக்டர் அ. சி. செட்டியார் தம் இனிய பேச்சை முடித்தார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரான ஜீ. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் நகைச்சுவையோடு பேசினார்கள். துன்பியலில் உச்சநிலையைப் பற்றிய பல பகுதிகளுக்கு இவர்கள் புதிய உரை தந்துள்ளார்கள். அவருடைய பேச்சில் ஆர்வமும் அங்கதமும் மிகுதியாயிருந்தன. அவர் பேசினார், பாடினார், ஆடினார். சிலப்பதிகாரமும் முத்தமிழுக்கும் நிலைக்களமாக விளங்கிய நூல்தானே?

சிலப்பதிகாரத்தின் உயிர்நிலையான அடைக்கலக்காதையைப் பற்றித் திருமதி ஈ. த. இராசேசுவரி அம்மையார் பேசினார்கள். வழக்கம்போல அவர்களுடைய பேச்சு நன்றாக இருந்தது. ஆண்களெல்லாம் கண்ணகியின் சிறப்பைப் பேச, ஒரு பெண் கோவலனின் நற்பண்புகளைக்கூறி அவன் காமவெறியன் அல்லன் என்று உரைத்தது மிகப் பொருத்தமாக இருந்தது.

டொக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் **பூம்புகார்** என்ற பொருள்பற்றிப் பேசியபோது, இந்நகர் 40 மைல் சுற்றளவுக்கு இருந்ததையும் கூரைக்கோயில், ஓட்டுக்கோயில், கற்கோயில் ஆகிய மூன்றும் இன்னும் இங்கே இருப்பதையும் தெரிவித்தார்கள். இவர்கள் பல நூல்களை யாத்தவர்கள். இவர்களுடைய சுறுசுறுப்புப் பாராட்டத்தக்கது ஆகும்.

### கலையழகு

உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு அன்றோ? மிகுதியாக உண்டதால் சிறிது நேரமானபின்னரே யான் மூன்றாம்நாள் பிற்பகலில் மேடைக்குச் சென்றேன். செல்லும் வழியில் **யார் பேசுகிறார்கள்?** என்று ஒரு சிறுவனைக் கேட்டேன். **யார் என்று தெரியவில்லை. போட்ட மாலையைக் கழற்றாமல் ஒருவர் பேசிக்கொண்டே இருக்கிறார்** என்று அவன் பதில் கூறினான். குழந்தை யுள்ளமுடைய பன்மொழிப் புலவர் மீனாட்சிசுந்தரனார் அவர்களே பேசிக்கொண்டிருப்பவர் என்று நான் முடிவு செய்துகொண்டேன். குடும்பப் பெண்களுக்கு ஒழுக்கம்மட்டும் போதியதாகாது. அவர்கட்கும் அழகு வேண்டும். ஆடல் அரசிகளாயும் பாட வல்லவராயும் பெண்களும் திகழவேண்டும். இதுதான் சிலப்பதிகாரத்தால் நாம் அறிவது என்று உணர்ச்சி ததும்ப அவர்கள் பேசினார்கள்.

கட்டப்பொம்மன், வ. உ. சி. ஆகியோர் புகழோடு சிலப்பதிகாரத்தின் பெருமையையும் தமிழ்நாடெங்கும் பல ஆண்டுகளாகப் பரப்பிவரும் சிவஞானகிராமணியார் அவர்களுடைய சுவையான பேச்சுடன் விழா நிறைவேறியது. சிலப்பதிகார வரலாற்றைப்பற்றிய சித்திரங்களைத் தமிழிசைச் சங்கத்தார் சென்[illegible]டிக்கொண்டிருக்கும் [illegible]த்தில் வரையவேண்டும் என்று இவர்கள் சண்முகம் செட்டியார் அவர்களை வேண்டினார்கள்.

பாத்திரங்களின் பண்பை விளக்கிப் பேசிய புலவர்கள் ஒருவரேனும் மாதவியைப் பற்றித் தனியாக விரிவாகப் பேசவில்லை. அவளும் ஒழுக்க நெறியில் பிறழாதவள். கோவலன்பால் உண்மை அன்புடையவள்.

### நினைவுச் சின்னம்

இந்த விழா மக்கள் உள்ளத்தில் நிலைபெற வேண்டுமானாற் பெரிய காரியங்கள் சிலவற்றைத் தமிழ்மக்கள் செய்ய வேண்டும். இளங்கோவுக்கும் கண்ணகிக்கும் இந்நகரில் தக்க நினைவுச் சின்னங்கள் நிறுவுவது நம் கடமையாகும். இலங்கை அரசியலார் அநுராதபுரத்தில் செய்து வருவது போல, இந்திய அரசியலார் இங்கே புதைபொருள்களை ஆராயும் வேலையில் ஈடுபட வேண்டும். இவற்றுக்கான முயற்சிகளை விழாவின் செயற்குழுவினர் செய்து வருவது பாராட்டுக்குரியது. விழாவில் அறிஞர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைச் சுருக்கெழுத்து வாயிலாக எழுதிவைத்திருந்து நூல் வடிவில் தொகுத்து வெளியிட இவ்விழாவில் ஏற்பாடு செய்ய முடியவில்லை. சிலப்பதிகார ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நடத்திப் பல்கலைக் கழகத்தார் இந்தப் பணியில் இறங்குவார்களாக.

ஆங்கிலத்திலும் மற்றைய மொழிகளிலும் எல்லா இலக்கிய நூல்களும் சாதாரண மக்கள் வாங்கிப் படிக்கத்தக்கபடி வெளியிடப்பட்டிருக்கின்றன. கல்வியில் தேர்ந்தவர்களுக்கென்று உயர்ந்த ஆராய்ச்சி உரைகளுடன் தனிப் பதிப்புக்கள் இருக்கின்றன. பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் தெளிவான எளிய உரையுடன் குறைந்த விலையுடன் பொதுமக்கள் பதிப்பு வெளிவரல் வேண்டும். அந்த முயற்சியிலும் சிலப்பதிகாரக் குழுவினர் ஈடுபடுவார்களாக. அதன் பயனைச் [illegible] எல்லோரும் பெற்றுக்கொள்வதாக.

## கல்விப் பேச்சு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மந்திரி கனகரத்தினம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

### மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவின்போது அதன் அதிபர் வண. சிமித் அவர்கள் ஆசிரியத் தொழிலைக் கவர்ச்சிகரமான ஓர் தொழிலாக்க வேண்டுமெனத் தமது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

பல்கலைக்கழகத்திற் பட்டம் பெறுகின்றவர்கள் ஆசிரியத் தொழிலைத் தமது ஜீவனோபாயமாகக் கைக்கொள்ள விரும்புவதாயின், அத் தொழிலானது அவர்களைக் கவரக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கவேண்டுமென யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அரசினர் இவ் விஷயத்தில் விரைந்து உழைக்காவிடின் பள்ளிக்கூடங்களில் ஸ்திரமான ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்வது சாத்தியமாகாதென அவர்கள் கருதுகின்றார்கள்.

புதிய கல்வித்திட்டம் பள்ளிக்கூடங்களின் பண நிலையை நன்கு பாதித்துவருகின்றது. எனவே, தொழிற்கல்விமுறையானது நன்கு கைகூடவேண்டுமாயின் அரசினரின் பண உதவி அத்தியாவசியமானது. இப் பரிசளிப்பு விழாவுக்கு போக்குவரத்து டைரக்டரின் நிரந்தரக் காரியதரிசியான திரு. ஜெ. என். ஆறுமுகம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

### மகாஜனக் கல்லூரி

ஒருநாட்டின் கல்வித் திட்டத்தை ஒரு தலைமுறையிலோ அன்றேல் ஒரு மந்திரிசபையினராலோ உருவாக்கிவிட முடியாதென மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பரிசளிப்புவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது தெரிவித்தார். இவ் விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதேதினத்திற் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவரான திரு. கே. மதியாபரணம் அவர்கள் அமைத்துதவிய புதிய வகுப்பு அறையினை மந்திரி பொன்னம்பலம் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. ரீ. ரீ. ஜெயரத்தினம் அவர்கள் தமது அறிக்கையிற் புதிய கல்வித்திட்டத்தில் ஏற்பட்டுள்ள சிறந்த திருத்தங்களைப்பற்றியும் இத்திட்டம் மதபரிபாலன சம்பந்தமான பள்ளிக்கூடங்களின் ஆதரவைத் தாராளமாகப் பெற்றிருக்கின்றதெனவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இப்புதிய திட்டத்திலுள்ள இரு அம்சங்கள் பலரின் மூளைகளுக்கு வேலைகொடுத்து வருகின்றன. 1. எட்டாவது வகுப்பில் நடைபெறும் தேர்வு 2. மாணவர்களிடமிருந்து குறித்த தொகையான சம்பளம் அறவிடுவதற்கு அளிக்கப்பட்டுள்ள வசதி. தேர்வைப் பொறுத்த மட்டில் மிகுந்த ஆராய்வுடன் நடக்கவேண்டியிருக்கின்றது. இங்கிலாந்து போலன்றி இலங்கை தேர்வு விஷயத்தில் இன்னும் பூரண நிலையை அடையவில்லை. பணம் அறவிடும் விஷயத்திற் பள்ளிக்கூடங்களின் கஷ்டத்தை யுணர்ந்து அனைவரும் ஒத்துழைத்து ஆகவேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

### கொக்குவில் இந்துக்கல்லூரி

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டிவிழா சனிக்கிழமை (30-6-51) பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி

இக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி விழா இம்மாதம் 7-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } No. 1314

In the matter of the estate of the late Veluppillai Ganeshapillai of Chunnakam.

Sinnammah widow of Ganeshapillai of Chunnakam
*Vs.* *Petitioner*

1. Paruvathy widow of Aiyampillai of Chunnakam
2. Eliapillai widow of Veluppillai of do presently of Kelaniya.
3. Selliah Rasanayakam of Anuradhapura
4. Vettivelu Thurairajah and wife
5. Kamalanayakee of Mallakam presently of Chavakachcheri
6. Sellaiah Navaratnarajah of Anuradhapura
7. (*Minor*) Selvanayaki daughter of Sellaiah of do.
8. Veluppillai Tharumalingam and wife
9. Parupathipillai of do
10. Soundaram widow of Sellaiah of do.

*Respondents*

This matter coming on for disposal before V. S. Jayawickrama, Esquire District Judge. Jaffna, on the 16th day of May, 1951, in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the petitioner and the affidavit of the abovementioned petitioner dated 13th day of May 1951 having been read:

It is ordered that the said 10th respondent be appointed guardian-ad-litem over the minor the 7th respondent and that the said petitioner be declared entitled to have letters of Administration to the estate of the said intestate as his widow the same be issued to her accordingly unless the respondents or others interested shall on or before the 16th day of July, 1951, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the petitioner do produce the minor the 7th respondent in Court on the said date,

This 25th day of June, 1951.

Sgd. ***V.S. Jayawickrama***
District Judge

[4347—ii]

## கோரியாப் போர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

த்துவதைப் பற்றியும் விவாதிக்க வேண்டுமென ருஷியா கருதுகின்றது.

கோரியாவிற் சமாதானம் நிலவுவதை அமெரிக்காவும் பிரிட்டனும் உண்மையாகவே விரும்புமாயின் இந்த அளவுக்கு விட்டுக் கொடுக்கலாம் என்பதே உலக அபிப்பிராயமாகும்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்ய[illegible] கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு ஜூலை 1-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org